*Free Circulation*

வெற்றிமணி வெளியீடு 29

# சிவத் தமிழ்

2017



சுய அனுபவமே
**உண்மையானது**



இறைவன் ஒளிந்து
இருக்கும் இடம்


பிரதம ஆசிரியர்
**கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A**


அகமும் புறமும் ஆலயம் அமைப்போம்

# சுய அனுபவமே
# உண்மையானது



ஒரு இளம் சன்னியாசி ஒரு குருவின் ஆசிரமத்தில் தங்கியிருந்து துறவறம் பற்றி அறிந்துகொள்ள முயன்று வந்தார். ஆனால் அந்த குருவோ எப்போதாவது ஏதாவது ஒரு விஷயத்தைச் சொல்வார். அவர் சொல்வதும் முக்கியத்துவம் வாய்ந்த விஷயமாக இருக்காது. இதனால் மனம் வெறுத்த அந்த துறவி அங்கிருந்து வெளியேற முடிவு செய்தார்.

ஆனால் அவர் வெளியேறும் முன்பாக அங்கு ஒரு நிகழ்வு நடந்தது. அதன் பிறகு அந்த துறவி அங்கிருந்து வெளியேறவேயில்லை. அதாவது, அன்றைய தினம் மற்றொரு இளம்
துறவி அந்த ஆசிரமத்திற்கு வந்தார். அங்கிருந்தவர்களுடன் பேச ஆரம்பித்த அவர் பல்வேறு ஆழமான கருத்துக்களை பேசினார். ஆன்மீகத்தின் பல கோணங்களை ஆராய்ந்து ஏறக்குறைய 2 மணிநேரம் பேசினார். அந்த ஆசிரமத்தின் குரு கண்களை மூடியவாறு அவரது பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

அந்தப் பேச்சைக் கேட்ட இளம் துறவி, “குரு என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும்” என்று முடிவு செய்தார். அவருடன் சென்று விட முடிவு செய்தார். அவரது பேச்சைக் கேட்ட அனைவரும் அவரைப் பாராட்டினார்கள்.

பேசி முடித்த அந்த புதிய துறவி அருகேயிருந்த குருவிடம் தனது பேச்சு எப்படி இருந்தது என்று சிறிது கர்வத்துடன் கேட்டார். கண் விழித்த அந்த குரு, நீ எப்போது பேசினாய்?
நானும் பார்த்துக் கொண்டிருக்கிறேன் 2 மணிநேரமாக நீ பேசாமல் அமர்ந்து கொண்டிருக்கிறாயே என்றார். அப்போ, இதுவரை பேசியது யார் என்று அந்த புதிய துறவி கேட்டார். “சாஸ்திரங்கள் பேசின, நீ படித்த புத்தகங்கள் பேசின, நீ உன் சுய அனுபவத்தைப் பற்றி ஒரு வார்த்தை கூட பேசவில்லை“ என்று குரு சொன்னார்.

இப்படித்தான் பலரும் தாங்கள் மற்றவரிடமிருந்து கேட்ட கற்ற விஷயங்களை பேசி வருகின்றனர். சுய அனுபவத்தைப் பேசுவதில்லை. சுய அனுபவமே உண்மையானது.

# சிவத் தமிழ்

அன்பே சிவம்! சிவமே தமிழ்!!

மலர் 13 2017 இதழ் 29



ஆரம்பம் 2004



பிரதம ஆசிரியர்
கலைஞானமணி
கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A
Tel.02351 458862
0049 163 199 2333
e.mail. vettimaniy@hotmail.com

உதவி ஆசிரியர்
ஆன்மீகத்தென்றல்
த.புவனேந்திரன்

கௌரவ ஆசிரியர்
கலாநிதி கவிஞர் வி.கந்தவனம்
"இலக்கியச் செம்மல்"
இந்து மகேஷ்

யேர்மனி
Brinker Höhe 13
58507 Lüdenscheid - Germany
0163 199 2 333

இலங்கை
திருமதி.வலன்ரீனா இளங்கோவன்.M.A
தபால்பெட்டி ஒழுங்கை
பலாலிவீதி
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்
யாழ்ப்பாணம்



Published by
**Vettimaniy Ltd U.K**


## இனிய சங்கமம்



**மற்றவர் சோற்றுக்குள்**
**உங்கள் விருப்பைப் பிசையாதீர்கள்.**

சமைத்த உணவை உண்பதில் கூட ஒருவருக்கு ஒருவர் வேறுபாடாகவே இருப்பர். ஒருவர் எல்லாக் கறிகளையும், சாதத்துடன் சேரத்து பிசைந்து உண்பர்.

சிலர் அப்படிச் சேர்த்தால் ஒவ்வொரு கறியினதும் சுவையும், தனித்தனி தெரியாது என்பார்.

எல்லாக்கறியும் சேர்ந்து பிசைந்தபோது வரும் கூட்டுச் சுவையே தனிச்சுவை எனவும் மற்றவர் வாதிடுவர். இப்படி உண்ணும் உணவுக்குள் எத்தனை வேறு பாடுகள். இருந்தாலும் உண்பவர்கள் எல்லோரும் தம் தம் வழியில் உண்டு இன்பம் அடைகிறார்கள்.

இப்படி இப்படித்தான் உண்வேண்டும் என்பது எல்லாம், அவரவர் மன இயல்பை, அனுபவத்தைப் பொறுத்தது. உணவைச் சமைப்பதும், சுவைப்பதும் இப்படி என்றால், அந்த உணவையும், அதனைச் சுவைக்க உயிரையும் தந்த இறைவனைச் சுவைப்பது மட்டும் ஒரே மாதிரியாக வா இருந்துவிடும். ஆண்டவனது அன்பையும் எமக்கு ஏற்றவிதத்தில் சுவைக்கலாம். நீக்கமறக் கலக்கலாம்.

இறைவனை அடைவதற்கான சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு மார்க்கங்களை காணலாம். அவை ஒவ்வொன்றும் தனித் தனி வழியானாலும், அந்தவழிகள் யாவும் இறுதியில் வந்து சேரும் இடம் ஒன்றாகவே அவன் பேரின்பத்தை அடையும் பேறாகவே அமைகின்றன.

சரியை என்பது சரீரத்தால் செய்யும் பணி கோவிலைச் சுத்தம் செய்வது முதலான ஆலயங்களில் செய்யும் தொண்டு.

அடுத்து கிரியை எனப்படுவது, உள்ளத்தாலும் புறத்தாலும் பூஜிப்பது. "நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம்" என்னும் தாயுமானவர் வழியில் பூஜிப்பது கிரியை ஆகும்.

சிவம் ஒன்றையே ஒருமுகப்படுத்தி வழிபடும் நிலை யோகம். புலன்களின் வழியாக வேறு எந்த சிந்தனை களும் நமக்குள் தோன்றாதவாறு, நாம், இறைவனாகிய பரம்பொருளை தியானிக்கிறோம் என்னும் வேறுபாடு மறைந்து, இரண்டறக் கலக்கும் நிலையே யோகம்.

இறைவனைப் பற்றியும் உயிரைப் பற்றியும் தெரிவிக்கும் பெரியவர்களின் உபதேசங்களைப் பெற்று இறைவனின் அருளைப் பெறுவதற்கான ஞானத்தைப் பெறுவது.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் இந்த வழிகளின் மூலமாக இறைவனின் அருள் கிடைக்கும்.

எனவே ஆண்டவனை வழிபட எது உங்களுக்கு உகந் ததோ அதனைப் பின்பற்றுங்கள். மற்றவர் சோற்றுக்குள் உங்கள் விருப்பைப் பிசையாதீர்கள்.

**மு.க.சு.சிவகுமாரன்**



# கோவிலில் செய்யக்கூடாத விடயங்கள்!



1.கோவிலில் தூங்க கூடாது.
2.தலையில் துணி, தொப்பி அணியகூடாது.
3.கொடிமரம், நந்தி, பலிபீடம், இவைகளின் நிழல்களை மிதிக்க கூடாது.
4.விளக்கு இல்லாமல் (எரியாத பொழுது) வணங்க கூடாது.
5.அபிஷேகம் நடக்கும் பொழுது சுற்றி வரகூடாது.
6.குளிக்காமல் கோவில் போககூடாது.
7.கோவிலில் நந்தி மற்றும் எந்த முர்த்திகளையும் தொடகூடாது.
8.கையில் விளக்கு ஏந்தி ஆராதனை காட்டகூடாது.
9.மனிதர்கள் காலில் விழுந்து வணங்க கூடாது.
10.கோவிலுக்கு சென்று திரும்பிய உடன் கால்களை கழுவ கூடாது..
11.சிவன் பெருமான் கோவில்களில் அமர்ந்து வரவேண்டும், பெருமாள் கோவில்களில் அமர கூடாது.
12.வாசனை இல்லாத மலர்களை பூஜைக்கு அல்லது தெய்வம்களுக்கு தர கூடாது.
13.கோயிலை வேகமாக வலம் வருதல் கூடாது.
14.தேவதைகள் பலிபீடத்திற்கு நடுவிலும், லிங்கத்திற்கும் நந்திக்கும் நடுவிலும் செல்லக்கூடாது.
15.எவருடனும் வீண் வார்த்தைகள் கோயிலில் வைத்து பேசக்கூடாது
16. எதிரிக்கு துன்பம் கொடு என வணங்கக்கூடாது

## அட்டைப்பட விளக்கம்:பாற்கடல்



பாற்கடல் எம் உள் உள்ளது.
இங்கு ஆறு ஆதாரங்கள் உண்டு.
மத்தாக மந்தார மலையான மேரு தண்டமும்,
அதன் இடப்பக்கம் இடைகலை நாடியும்,
வலப்பக்கம் பிங்கலை நாடியும், வாசுகியாக
சுழு நாடியும் இருக்கின்றன.
தேவர்கள் சாத்வீக குணமாகவும், அசுரர்கள்
தாமச குணமாகவும் இருக்கின்றனர். இவற்றைச்
செயல்படுத்துவது இராஜத குணமாகும்.
இங்கு மனம் என்னும் புற்றில் இரு பாம்புகள்
இருக்கின்றன.
அதில் ஒன்று பருஉடல், மற்றது நுண்உடல். பருஉடல் உடல் சார்ந்தது, நுண்உடல் ஆத்மா சார்ந்தது. உயிரான பாம்பிற்கு ஐந்து படங்கள் அவை மெய், வாய், கண், காது, மூக்கு என்பனவாகும். இந்த ஐந்து பொறிகளினூடாக நுகர்வது மனம், சித்தம், புத்தி, அகங்காரம் என்னும் நான்காகும்.
பருஉடலுக்காக ஐந்தாய் விரிந்தாடிய மனத்தை
நுண்உடலுக்காக ஒடுக்கி ஒருமுகமாக்கும் போராட்டமே
பாற்கடல் கடைவின் தத்துவமாகும். இதைத் திருமூலர் பின் வரும் பாடல்மூலம் கூறியுள்ளார்.

“நாகமும் ஒன்று படம் ஐந்து நாலது
போகமும் உட்புற்றில் பொருந்தி நிறைந்தது
ஆகம் இரண்டும் படம் விரித்து ஆட்டுஒழிந்து
ஏகப்படம்செய்து உடம்புஇடம் ஆமே”



அராலி வண்ணபுரம் சிவன் கோவில்

# அவலங்களைப் போக்கும் ஆன்மிக வாழ்வு



**கலாநிதி கவிஞர் வி.கந்தவனம்**

ஆன்மிகம் என்றதுமே அது சமயத்தோடு தொடர்புடைய வழிபாட்டுக்கு அளிப்பது வேத ஆகம விதிகளை நடை முறைப்படுத் துவது, கோயிலிற் பூசை களையும் விழாக் களையும் செய்வது, ஒழுக்கத்தை வலியுறுத் துவது என்றெல்லாம் நினைப்பதும் பேசு வதும் வழக்கமாகிவிட்டது.

அவ்விதம் நினைப்பவர் முக்கியமான ஒன்றைப் பொதுவாகக் கருத்திலே கொள்வ தில்லை - ஆன்மீகம் என்பது தங்களைப் பற்றியது என்று எண்ணத் தவறிவிடு கின்றனர்.

ஆன்மா என்றால் உயிர். பசு என்று சைவசித் தாந்தம் பேசும்.பசுக்கள் பலவகையாயினும் ஆன்மீகத்தில் தங்கள் உயிர் களைப் பற்றிச் சிந்தித்து அதற்கு ஈடேற்றந் தரமுயல்பவர் மக்களேயாவர். அதனா லேயே,

தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய
மன்னுயிர் எல்லாந் தொழும்(1)

என்றார் வள்ளுவர் பெருமான். 'தன்னுயிர் தானறப் பெறுதல்' என்பது தன்னைத்தான் முழுமையாக அறிதல். முழுமையாக அறிதல் என்றால் என்ன?

குறைகளை மட்டுமன்றி நிறைகளையும் அறிதலே முழுமையாக அறிதல் என்பது. இது சுயவிசாரணை பற்றியது. நாம் எங் களைப் பற்றி ஆராய்தல் வேண்டும்.

நான் ஆர் என் உள்ளம் ஆர் ஞானங்கள் ஆர்?
என்னை யார் அறிவார்(2)

என்று கேட்கின்றார் மணிவாசகப் பெருமான். இது ஒரு நல்ல ஆய்வு முறை. எங்களைப் பற்றி முழுமையாக அறிவதற்கு இவ்விதம் கேள்விகள் கேட்க வேண்டும். ஆனால் நாம் எங்களைப்பற்றி ஆராய்வது பொதுவாகக் குறைவு. மற்றவர் களைப்பற்றித் துருவித் துருவி ஆராய்வோம். அதுவும் அவர்களின் குறைகளையே அதிகம் பேசுவோம். அதனையும் சோடித்து இல்லா ததையும் பொல்லா ததையும் வைத்துப் பேசு வோம்.

ஆனால் எங்களைப் பற்றிப் பேசும்பொழுது நிறைவைத்தான் பேசுவோம்; குறைகளைப் பற்றிப் பேசவே மாட்டோம்.

எம்மிடம் குறைகள் கண்டாலும் அல்லது நாம் ஏதும் தவறுகள் செய்தாலும் அவற்றுக்கும் பிறர்தாம் காரணம் என்று சொல்லி அவர்களைத் தூற்றுவோம். ஏனென்றால் நாங்கள் செய்வ தெல்லாம் சரி, மற்றவர்கள் செய்வது சரியில்லை இப்படி ஒரு மனப்பான்மை; ஆணவத்தின் விசித்திரம். இது எங்களைப்பற்றி முழுமையாக அறியாததால் ஏற்படக்கூடிய விளைவு.

**அவலங்களைப் போக்கும் ஆன்மிக வாழ்வு....**

தான் அறுதல் - நான் என்னும் முனைப்புக் கெடுதல். பசுக்கள் இயல்பாகவே மலபந்தம் உடையன. மலங்கள் ஆணவம், கன்மம், மாயை என மூவகைப்படும். மும்மலங்களில் ஆணவம் இருளிலும் கொடியது எனப்படு கின்றது. ஏனெனில் இருள் தன்னைக் காட்டும்; பிறபொருள்களை மறைக்கும். ஆனால் ஆணவம் தன்னையும் காட்டாது பிறவற்றையும் அறியவிடாது. ஆணவத்தின் முனைப்புக் கெடுதலே தான் அறுதலாகும். இக்கெடுதி 'எல்லாம் இறைவன் செயல்' என்ற உண்மை நிலைக்கு உயிரை உயர்த்தும். அந்த உயிரை ஏனைய உயிர்கள் எல்லாம் தொழுமாம்.

எனவே ஆன்மீகம் என்பது தன்னைத்தான் அறிதல். தனது நடத்தையில் உள்ள குறை நிறைளை மதிப்பிடுதல். வையத்தில் வாழ் வாங்கு வாழ்வதற்கு இவ்வித மதிப்பீடு மிக இன்றியமையாதது.

**திருவருளால் அறிதல்**

தான் அறுந்து தன்னதைத்தான் அறிந்து கொள்வதற்குத் திருவருள் கை கூடுதல் வேண்டும். ஒருமுறை கொழும்புத்துறை சிவயோக சவாமிகளை அவரது குரு செல்லப்பா சுவாமிகள் 'யாரடா நீ' என்று கேட்டார்.
சாதாரணமாக இத்தகைய கேள்வி ஒரு வருக்குக் கோபத்தை உண்டு பண்ணக் கூடியது; அடிபிடியிலும் முடியக்கூடியது. யோகர்சுவாமிகள் பக்குவம் பெற்ற ஆன்மா வாதலால்,


என்னையெனக் கறிவித்தான் எங்கள்குரு நாதன்
இணையடியென் தலைவைத்தான் எங்கள்குரு நாதன்
அன்னைபிதா குருவானான் எங்கள்குரு நாதன்
அவனியெல்லாம் ஆளவைத்தான் எங்கள்குரு நாதன்(3)

என்று பாடினார். தன்னைத்தான் அறிதலும் இறையருளால் வரவேண்டியது என்பதைச் சொல்லாமற் சொல்லுகின்றார். எல்லாம் இறைவன் செயல் என்று வெறுமனே வாயாற் சொல்லுவதற்கும் தானறப் பெற்ற ஞான நிலையிலே சொல்வதற்கும் வேறுபாடு அதிகம். ஞானநிலை இறை அருளோடு கூடியது. குருவின்றி ஞானம் இல்லை. ஞானம் என்பது பதிஞானம். அவனின்றி அணுவும் அசையாது என்கின்ற ஞானம். அவனை அறிந்து அவனுடன் வாழ்கின்ற வாழ்வே ஆன்மிக வாழ்க்கை. அவனை அறிவதற்கு ஆகாயத்தைப் பார்க்க வேண்டியதில்லை; கோயில் குளங்களுக்கும் அலைய வேண்டியதில்லை.

கங்கை யாடிலென் காவிரி யாடிலென்
கொங்கு தண்கும ரித்துறை யாடிலென்
ஓங்கு மாகடல் ஓதநீர் ஆடிலென்
எங்கும் ஈசன் எனாதவர்க் கில்லையே(4)

என்ற அப்பர் பெருமான் கருத்துக் கவனிக்கத் தக்கது. இக்கருத்தே இக்காலத்தில் வலுப்பெற்று வருகின்றது. மரபுரீதியாக ஆன்மீகத்தை ஆலயங் களே வளர்த்து வந்தன.


இக்காலத்தில் ஆலயம் என்கின்ற நிறுவனத்துக்கு அப்பால் ஆன்மீகத்தை வளர்க்கும் அமைப்புகள் பல தோன்றியுள்ளன. சாயிபாபா பத்தர்கள், பிரம்ம குமாரிகள், அம்மா பகவான் அடியார்கள், மேல் மருவத்தூர் பங்காரு அடிகளின் அடியார்கள் உல கெங்கணும் உள்ளனர். அவர்கள் வீட்டுப் பிரார்த் தனைகள், கூட்டுப் பிரார்த்தனைகள் மூலம் ஆன்மீகத்தை வளர்த்து வருகின்றார்கள். ஆலயங் களுக்கு அவர்கள் செல்வது குறைவு.



**யோகசுவாமிகள்**

**தொடர்ச்சி 07ம் பக்கம்.**

## உடம்பினுள்ளே உறுபொருள்



இறைவன் எங்கும் இருக்கின்றான்; எமக்குள்ளேயும் இருக்கின்றான். எமக்குள்ளே இருக்கும் இறைவனைக் கண்டறிதலும் அவனுடன் உறவாடி மகிழ்தலும் ஆன்மீகச் செல்வரின் வாழ்க்கையாகும்.

உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டானென்று
உடம்பினை யானிருந்து ஓம்புகின் றேனே(5)

என்றார் திருமூல நாயனார். உள்ளே இருக்கும் உறுபொருளை அறிதலே தன்னைத்தான் அறிதலின் உச்சக்கட்டம்.

உறுபொருளை உள்ளே கண்டுவிட்டதால் திருமூலநாயனாருக்கு உடம்பு கோயிலாகின்றது. காணாதவருக்குக் காயம் ஒரு மாயம்; பொய், காற்றடைத்த பை. திருமூலரே அது இழுக்கு என்று தான் இருந்ததை ஒப்புக்கொள்கின்றார். உத்தமன் - இறைவன். இறைவன் தன்னுள்ளே கோயில் கொண்டான் என்று உணர்ந்துகொண்டபின் உடம்பினை இருந்து ஓம்புகின்றார். தனக்காகவல்ல, இறைவனுக்காக.

ஓம்புதல் - பேணுதல். எவ்விதம் இறைவன் எழுந்தருளியிருக்கும் கோயிலைச் சுத்தமாக வைத்திருக்கிறோமோ அவ்விதம் உடலையும் சுத்தமாகப் பேணுதல் வேண்டும். இறைவனைத் தம்முள்ளே கண்டவர் மது அருந்தமாட்டார்கள்; மச்சம் புசிக்கமாட்டார்கள்.

உடற் சுத்தத்துடன் மனச்சுத்தத்தையும் பேணுதல் வேண்டும். இறையுணர்வு பெற்றவர் அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் போன்ற அழுக்குகளை அணுகவிடமாட்டார்கள். இவ்வழுக்குகளாலேயே உலகத்திற் பகைமைகள் வளருகின்றன; தீமைகள் இடம்பெறு கின்றன. ஆன்மீகத்தர் பூசு நீறுபோல் உள்ளத்தை எப்பொழுதும் புனிதமாகவே வைத்திருப்பர். உள்ளப் புனிதம் அன்பை வளர்க்கும்; அமைதியை நிலைநாட்டும்.

திருமூல நாயனார் கண்ட உறுபொருளை அப்பர் பெருமானும் தம்முள்ளே கண்டு பாடுகின்றார்:

தேடிக் கண்டு கொண்டேன் - திரு
மாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டுகொண்டேன்.(6)

அதனால் காயமே கோயில் என்றும் பாடிக்களிக்கின்றார்.

இந்த இணையற்ற அனுபவமே தன்னுயிர் தானறப் பெறுதல் என்பது. தன்னுயிர் தானறப் பெறுதலே மனிதப் பிறவியின் தலையாய பயன்; பிறவிப் பெருங்கடலை எளிதாக நீந்திக் கடப்பதற்கு உகந்த உபாயம்; முத்தியின்பம் பெறுவதற்கு முதன்மையான முறை. அதற்கென்றே இப்பிறவி பெறப்பட்டது. இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ?

ஆன்மீக வாழ்வு துறவறத்துக்குரியதா?

இனி, ஆன்மீக வாழ்வு துறவறத்துக்குரியது என்று பலர் நினைக்கிறார்கள். அதாவது இல்லறம் துறவறம் என்கின்ற இரண்டில் இல்லறம் உலகியலுக்குரிதென்றும் துறவறம் ஆன்மீகத்துக்கு உரியதென்றும் கருதுகின்றார்கள்.

தொடர்ச்சி மறுபக்கம்

சைவம் அப்படிச் சொல்லவில்லை. இல்லறத்தில் இருந்துகொண்டே ஒருவர் ஆன்மீக வாழ்வை அனுபவிக்கலாம். உண்மையில் துறவறத்துக்கும் இல்லறமே உதவியா கவுள்ளது.

**துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்**
**இல்வாழ்வான் என்பான் துணை (7)**

என்பார் வள்ளுவர் பெருமான்.

இல்லறத்தில் இருந்துகொண்டே இறைவனை உள்ளும் புறமுமாகக் காணலாம் என்பதனைச் சேக்கிழார் பெருமானின் திருத்தொண்டர் புராணம் எமக்கு நன்கு காட்டுகின்றது. அதன் கதாநாயகர் சுந்தரமூர்த்தி நாயனார் வரலாறே நல்ல உதாரணம்.

எனவே ஆன்மீகம் என்பது எமது உயிரின் நிலையான மேம்பாட்டுக்கே என்று துணிந்து நடப்பவர் எமது மதிப்புக்கும் வணக்கத்துக்கும் உரிய மலபரிபாகத்தவர்.

ஆன்மிக வாழ்வு பக்குவ வாழ்வு; இரு வினையும் ஒப்பான வாழ்வு. அதில் அமைதியும் சமாதானமுமே நிலவும்; சீவன் சிவனாகித் துலங்கும் அநுபூதி வாழ்வு அது.

**ஆன்மீகம் துறந்தா ருக்கோ**
**அவ்வுல குக்கோ வல்ல**
**ஆன்மீகம் எம்மைப் பற்றி**
**ஆராய வைத்துத் தீய**
**பான்மைகள் அனைத்தும் போக்கிப்**
**பக்குவம் செய்யும் பாதை**
**மேன்மைகொள் வாழ்வை இங்கே**
**மேற்கொள்ள வைக்கும் நீதி!(8)**

அவலங்களுக்கு மருந்து

**தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால் மனக்கவலை மாற்றல் அரிது(9)**

என்று முதலாவது அதிகாரத்திலேயே அறிவுறுத்துகின்றார் வள்ளுவர் பெருமான்.
அவர் என்றோ சொன்னதை இன்று பரிசோதனைகள் பல நிரூபித்துள்ளன.

அமெரிக்காவில் ஒரே வருத்தமுள்ள சிலரைத் தெரிவுசெய்து இரு குழுக்களாகப் பிரித்தனர். ஒரு குழவை இறை வழிபாட்டில் ஈடுபடுத்தினர். பின்னர் இரு குழுக்களினதும் முன்னேற்றங்களை மதிப்பிடுகையில் இறைவழிபாட்டுக் குழுவினர் மற்றயை குழுவினரிலும் வேகமாகக் குணமாகி வருவது கண்டிறிப்பட்டது. இந்தப் பரிசோ தனையைப் பகிரங்கமாகக் கனடா tvi தொலைக்காட்சியிற் கூறியவர் டாக்டர் சூரியபாலன் அவர்கள்.

இன்று உலகத்தில் சண்டை சச்சரவுகளும் வன் முறைகளும் கொலை களவுகளும் அதிகரித்து வருவதற்குக் காரணம் மக்கள் தங்களுக்குள் இருந்து, தங்களுக்கே தெரியாமல் தங்களை வழிநடத்தும் இறை வனை அறிந்து கொள்ளாமையேயாகும்.

அறிந்து கொண்டு பயனடைய வேண்டும் என்று சொல்வதே இக் கட்டுரையின் நோக்கம்.

இதுவரை ஆன்மீகம் என்பது எம்மைப்பற்றியது என்பதும் எம்மை நாம் அறிந்து கொண்டு தானற நடக்கவேண்டும் என்பதும் எமக்குள்ளே இருக்கும் இறைவனைக் கண்டுகொண்டு அவனுடன் உறவாடும் தெய்வீக வாழ்வே ஆன்மிக வாழ்வு என்பதும் ஆன்மீக வாழ்வால் தனிப்பட்டவரது நோய்நொடிகளன்றி அகிலகத்து அவலங்களையும் போக்கலாம் என்பதும் எடுத்துரைக்கப்பெற்றன.

இறுதியாக ஒன்று. ஆன்மீக வாழ்வு அனுபவிக்கப்பட வேண்டியது. அதனை யாரிடமிருந்தும் வாங்க முடியாது.

அதனால் ஆன்மிகத்தை வியாபாரம் ஆக்குபவர்பற்றி அன்பர்கள் கவனமாக இருத்தல் நல்லது.

வாழ்க ஆன்மீகம்!
வளர்க வையகத்து அமைதி!



# வழிபாட்டில் நீர்

–முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்–

“தீர்த்தத் திருவிழா”



வையகம் எங்கும் வழிபடச் செல்லும்போது எல்லோரும் நீராடித் தூய்மையாகச் செல்ல வேண்டும் என்ற மரபு இன்றுவரையும் தொடர்கிறது. நீரின் பயன்பாடு பற்றி நோக்கும் போது தமிழர் வழிபாட்டில் நீர் இன்றியமையாத ஒன்றாக விளங்குவதைக் காணலாம்.

இயற்கையின் கொடைகளில் ஒன்று நீர். 'நீர் இன்று அமையாது உலகு' என்று வள்ளுவர் கூறியுள்ளார். நீர் உணவாகவும் எல்லா உயிரினங்களுக்கும் பயன்படுகிறது. அதனால் நீர் தெய்வ மடைப் பொருளாகவும் போற்றப்படுகிறது.

நீர் நிலைகளை வழிபாட்டிடங்களாகத் தமிழரும் வையகத்தில் இன்னும் பலரும் கொண்டுள்ளனர். ஆற்றுநீர், ஊற்றுநீர், மழைநீர் என மூவகையான நீர் எமக்குக் கிடைக்கிறது. இன்னும் நீர் நிலைகளான அருவி, குளம், சுனை, குளம், ஓடை, கால்வாய், துரவு எனப் பல்வேறிடங்களிலும் வழிபாடு நடக்கிறது. பரிபாடல் என்னும் பழந்தமிழ் இலக்கியம் வைகை ஆற்றங் கரையிலே நடந்த வழிபாட்டைப் பதிவு செய்து வைத்துள்ளது. அருவியும், சுனையும் வழிபாட்டிடங்களாகப் பேணப் பட்டதைச் சங்கத் தமிழ்ச் செய்யுள்கள் விளக்கி யுள்ளன. நீர் வறண்டுவிட்டால் மண்ணுலகம் மட்டுமல்ல விண்ணுலகமும் இடர்படும் எனக் குறள் சுட்டிக் காட்டுகிறது.

“சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு”
(குறள் : 18)

மழை பெய்து நீர் வளம் மக்களுக்குக் கிடைக்கிறது. ஆனால் மழையை வானம் பொழியாது விட்டால் தேவர்களுக்கு மக்கள் செய்கின்ற விழாவும் பூசையும் நடைபெறாது. எனவே மழையை வேண்டி வழிபாடு ஒன்றை ஆண்டாள் தொடக்கி வைத்தாள். 'திருப் பாவை' என அவள் பாடிய முப்பது பாடல் களில் இந்த வழிபாட்டு மரபு முதன் முத லாகப் பதிவு செய்யப் பட்டுள்ளது. பின்னர் நாயன்மாரில் மாணிக்கவாசகர் திருவெம்பாவைப் பாடல்கள் என இருபது பாடல்களிலே மழை வேண்டி நோன்பிருக்கும் பண்பாட்டு நடை முறை யைப் பாடியுள்ளார். இம்மரபு இன்றுவரையும் மார்கழி நோன்பாக வழிபாட்டு மரபாக நிலைத் துள்ளது. மழைநீர் எல்லோருக்கும் பெரும் பயன்தருவது. எனவே அதற்காக எல்லோரும் கூட்டாக இணைந்து வழிபாடும் செய்வது சிறப்பானது. குறிப்பாக இந்த வழிபாட்டு நடை முறையைப் பெண்களே பேணிவந்துள்ளனர்.

நீரின் சிறப்புகளில் ஒன்று தண்மை. அதாவது குளிர்மையாக இருப்பது. அதனால் நீர் தண்ணீர் என்றும் சிறப்பாக அழைக்கப்பட்டது. நீர் எல்லோ ராலும் பேணிக் காக்கப்பட வேண்டும்.

அதனால் நீர் நிலைகளின் அருகே வழிபாட்டி டங்கள் அமைக்கப்பட்டன. சிறப்பாகப் பிள்ளை யாருடைய வழிபாட்டிடங்கள் நீர் நீலைகளுக்கு அருகிலே அமைந்தன. ஆற்றங்கரைப்பிள்ளையார், குளத்தங்கரைப் பிள்ளையார், கிணத்தங்கரைப் பிள்ளையார் எனச் சிறப்பாகப் பிள்ளையார் பெயர் கொண்டு வழிபடப்படுவது இதற்குச் சான்றாகும்.

இவ்வாறு அமைந்த நீரு நிலைகள் பொது நீர் நிலைகளாகவும் விளங்கின. மக்கள் தம்முடைய நீர்த் தேவைகளையும் இங்கே வந்து நிறை வேற்றினர்.

வழிபாட்டுக்கு வருபவர் நீர் நிலையிலே நீராடி வழிபாட்டை நிறைவேற்றிய பின்னர் தமது குடிநீர்த் தேவைக்கான நீரையும் குடங்களிலே சுமந்து சென்றனர். எல்லாக் கோயில்களிலும் கேணிகள் அமைக்கப்பட்டன. இயற்கையாக நீர்நிலைகள் இல்லாத இடத்துச் செயற்கையாகக் கேணிகள் அமைக்கப்பட்டன. மூவர் பாடிய தேவாரங்களிலே திருக்கோயில்களுக்கு அருகே அமைந்த நீர் நிலைகள் பற்றிய பல குறிப்புகள் உள்ளன. எடுத்துக் காட்டுகள் சில:

“பொன்திரள் மணிக் கமலங்கண் மலரும்
பொய்கை சூழ் திருப்புன்கூர்”...... (சுந்தரர்)
பரக்குங் காவிரி நீரலைக்குங் கரைக்
குரக்குக் கா..... (அப்பர்)
கோயிலு சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமாமலை ..... (சம்பந்தர்)

தொடர்ச்சி 10ம் பக்கம்.

9ம் பக்கத் தொடர்ச்சி **வழிபாட்டில் நீர்**

வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகரில்
பங்கஞ் செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்...... (சுந்தரர்)

திருக்கோயில்கள் அமைந்த இடங்களிலே சென்று நீராடினால் தீராத நோயும் பிணியும் தீரும் என்ற நம்பிக்கையும் பண்டைய மக்கள் மனதிலே வேரூன்றி உள்ளது. அவ்வாறு நீராடும் போது பாவங்களும் தொலையும் என்பர். திருநள்ளாறு என்னும் திருக்கோயிலிலே உள்ள நளதீர்த்தம் இத்தகைய சிறப்புடையதாகும்.

திருக்கோயிலுக்குள் செல்லும் போது கால்கழுவியே செல்ல வேண்டும். எனவே இயற்கையான நீர் நிலைகள் அமையாத திருக்கோயில்களிலே கேணிகளை அமைத் திருப்பர். அங்கு மக்கள் கால், கை, முகம், கழுவிய பின்னர் கோவிலுள் சென்று வழிபடுவர். பெருந்திருவிழாக் காலங்களிலே "தீர்த்தத் திருவிழா" என ஒரு திருவிழா நடைபெறும். அன்று சுவாமி நீர்நிலையிலே தீர்த்தமாடுவார். நீர் நிலைகளின் வேறு பாட்டிற்கேற்ப இவ்விழா வேறுபட்ட பெயர் களால் அழைக்கப்படுகிறது. சமுத்திரத் தீர்த்தம், கேணித்தீர்த்தம், கடல்தீர்த்தம், குளத்தீர்த்தம், எனப் பல பெயர்கள் உண்டு. இவற்றிற்குச் சிறப்பான பெயர்களும் உண்டு.

பாவநாசதீர்த்தம், மாணிக்க கங்கை, பாலாவித் தீர்த்தம், மாமாங்கத்தீர்த்தம், காங்காதீர்த்தம், நளதீர்த்தம் என்பன அவற்றுட் சிலவாகும். வழிபாட்டில் மடைப் பொருட்களான முக்கனி, வெற்றிலை, பாக்கு,



தேங்காய் என்பவற்றை நீரில் கழுவியே பயன்படுத்த வேண்டும். நீர் எல்லா வற்றையும் தூய்மைப்படுத்துவதால் அது தனித் துவமான சிறப்புடையதாக நமது முன்னோரால் கணிக்கப்பட்டிருந்தது. இறையுருக்களை நீராட்டிய நீர் எல்லோர் மீது தெளிக்கப்படும் போது அது எல்லோரையும் தூய்மைப்படுத்தும். நீரக் கரகங்கள் வழிபாட்டு நடைமுறைகளிலே இன்றி யமையாதவை. அவை 'பூரணகும்பம்' என வட மொழியில் அழைக் கப்பட்டன. இன்றும் இப்பயன்பாடு உள்ளது. இதற்குரிய தமிழ்ச் சொல் 'நிறைகுடம்' என்பதாகும். குடங்களிலே நீரை நிரப்பி மாவிலை தேங்காயை அதன் மேல் நேர்த்தியாக வைப்பர். குடங்களுக்கு நூல் சுற்றி விடுவர். குடமுழுக்குப் பூசையின் போது இந்த நிறைகுடங்களால் தெய்வங்களை நீராட்டுவர்.
வீடுகளிலே வழிபாட்டு நடைமுறைகள் செய்யும் போது முழுவீட்டையும் நீரால் கழுவும் வழக்கம் உண்டு. மஞ்சள் அல்லது பசுவின் சாணத்தை நீரிலே கரைத்து வீடுமுழுவதும் தெளித்துவிடும் வழக்கமும் உண்டு. மஞ்சளும் பசுவின் சாணமும் கிருமிகளை அழிக்கும் வலிமையுடையவை. நமது முன்னோர் பயன்படுத்திய இக்கிருமிநாசினி இப் போது வழக்கொழிந்து விட்டது. தொடர்ச்சி 12 ம் ப.


Hückelhoven
நகரில்

Asiatischer Super markt

ஆசியா சமுத்திரம்

துரித பணமாற்றுச் சேவை

பசுமையான மரக்கறிகள்
மளிகைப்பொருட்கள் அனைத்தும் தரமாகவும்
மலிவாகவும் கிடைக்கும்.


R.Ragunathan
Vijay tv agent
Deutschebank
IBAN: **DE55 3907 0024 0474 1153 00**
Bic:**DEUTDEDB390**
Email: mediajara@gmail.com
Parkhofstraße-101
41836 Hückelhoven
Fax: 02433 903281
Handy:01520 900 90 30



T.Anpalagan
Asiatischer super markt
Sittard str-21
41061-Mönchengladbach
Fax:02161- 9028399

Tel: 02433 903282
சிவத்தமிழ் சிறக்க வாழ்த்துகிறோம்
Tel: 02161- 9028388

# மீளா அடிமை உமக்கே ஆளாய்....



**"இலக்கியச் செம்மல்" இந்துமகேஷ்**

அறிந்தும் அறியாமலும், தெரிந்தும் தெரியாமலும், உணர்ந்தும் உணராமலும் தொடர்வது வாழ்க்கை.
இந்தத் தொடர்கதை இன்பம் நோக்கியது. முடிவில் இன்பம் பெறவென முயன்று கொண்டேயிருப்பது. முழுதான இன்பத்தை அது ஒருபோதும் தொட்டதில்லை எனும்போது முற்றுப் பெறாத இந்தத் தொடரின் முடிவுதான் என்ன?
பிறப்பெடுத்த எல்லா உயிர்க்கும் இறப்பு என்பதே முற்றுப் புள்ளியாய்த் தெரிகிறது.
பிறப்பின் பின் மரணம் என்பது எல்லோரும் அறிந்த ஒன்றுதான்.
ஆனால் எல்லோரும் அறிந்த இந்த ஒன்றில் அறியாமல் கலந்திருப்பதும் ஒன்றுண்டு. அது மரணத்துக்குப் பின்னும் ஒரு வாழ்வுண்டு என்பது.
„மரணத்துக்குப் பின் வாழ்வாவது.. அதை அறிந்துவந்து சொன்னவர் யார்? " எனும் கேள்விக்கு நம்பத்தகுந்தமாதிரி பதில் சொல்லத் தெரியாமல், தெரிந்தாலும் தெளிவுபடுத்த முடியாமல் மௌனித்துப் போகிறார்கள் எல்லோரும்.
உணர்ந்தவர்களால் மட்டுமே இந்த உண்மையைக் கண்டுகொள்ளமுடியும்.
பிறருக்கு அதை உணர்த்தமுடியாமல் போவதற்குக் காரணங்கள் பல இருக்கலாம்.
ஆனால் உணர்வதற்குத் தன்னைத்தான் உணரத் தலைப்பட்டவருக்கு இயலும்.

தன்னைத்தான் உணர்ந்தவன் பிற உயிர்கள் அனைத்திலும் அன்பு கொள்கிறான். அன்பினால் பிறரை இவன் ஆளுகை செய்த போதிலும் உண்மையில் இவன் தன்னையோர் அடிமையாகவே காட்டிக் கொள்கிறான்.

„நிலா நிலா ஓடிவா..!
நில்லாமல் ஓடிவா...
மலைமேலே ஏறிவா
மல்லிகைப் பூக் கொண்டுவா!"

குழந்தையைத் தூக்கி இடுப்பில் வைத்துக் கொண்டு அதற்கு உணவூட்டும் தாய் அந்தக் குழந்தையின் மகிழ்ச்சிக்காகத் தன்னையும் குழந்தையாக்கிக் கொள்கிறாள்.
வானத்திலிருக்கும் நிலவு பூமிக்கு வருவதாவது.நிலவுபற்றி அன்னைக்குத் தெரியும். குழந்தைக்குத் தெரியாது. ஒளிவீசும் ஒரு கிரகம் வானத்தில் உலாவந்து கொண்டிருக்கிறது என்பதை அது உணராது. ஆனால் நிலவின் ஒளியை அது உணர்கிறது.
நிலவு பூமிக்கு வராது ஆனால் நிலவின் ஒளி வரும் என்று அன்னைக்குத் தெரியும். குழந்தையின் மகிழ்ச்சி ஒன்றே குறிக்கோளாய் அவள் நிலவை அழைக்கிறாள். நிலவைப் பார்த்து மகிழ்ந்தபடி அன்னை ஊட்டும் அடுத்த பிடி உணவுக்காக வாயைத் திறக்கிறது குழந்தை.
இப்போது இங்கே இரண்டு குழந்தைகள்.

வானத்து நிலவை வாவென்று அழைக்கும் அனனையும் தன் குழந்தையோடு குழந்தையாகிறாள். அறிந்ததை அறியாததாய், தெரிந்ததை தெரியாததாய், உணர்ந்ததை உணராத தாய் காட்டிக் கொள்ளும் சந்தர்ப் பங்கள் எல்லோரது வாழ்க்கையிலும்தான் வருகின்றன.
„எல்லாம் எனக்குத் தெரியும்!" என்ற இறுமாப்பு ஒருவனை வீரனாகக் காட்டலாம். „சொல்லுங்கள் கேட்கிறேன்!" என்று பணிவோடு நிற்பவன் அடிமைபோலத் தோன்றலாம்.
ஆனால் உண்மை வேறானது. அடிமைக் கோலம் என்பது பக்தியில் மூழ்கி நிற்பவனுக்கு பரவசம் தருவது.
உலக சுகங்களுக்காக மற்றவர்க்கு அடிமையாயிருத்தல் என்பது அவமான கரமானது.

தன்னலம் மறுத்து தன் சுகம் வெறுத்து மற்றவர் நலம் நோக்கும் உயரிய கொள்கைகளோடு பிறருக்காய் வாழ்வதென்பது பார்வைக்கு அடிமைத்தனம் எனப் பெயர் கொண்டாலும் அந்த அடிமைத்தனம் உயர்வானது.

**தொடர்ச்சி 12ம் பக்கம்**

## வழிபாட்டில் நீர்...

10ம் பக்கத் தொடர்ச்சி



வழிபாட்டு நடைமுறையின் தொடக்கமாக நிறைகுடம் வைக்கப்படும். அக்குடம் புது நீரால் நிரப்பப்பட்டிருக்கும். வீடு தூய்மையாக இருப்பதையும் அங்கு வழிபாட்டு நடைமுறை நிகழவிருப்பதையும் நிறைகுடம் பறைசாற்றி நிற்கும்.

பொதுவாக மக்கள் நீராடுவதற்கு நீர்நிலைகளை நாடிச்செல்லும்போது இப்போது சுற்றுலா மனப்பாங்குடனேயே செல்கின்றனர். கீரிமலைத் தீர்த்தம் போன்ற வரலாற்றுப் புகழ் வாய்ந்த இடங்களிலே இந்நிலை மிகுந்து காணப்படுகிறது. நீர் பற்றிய எண்ணக்கருக்கள் இப்போது மாறிவிட்டன. பொது நீர்நிலைகள் தூய்மையாக இருக்க வேண்டும் எண்ணம் ஒருவருக்கும் இல்லை. வழிபாட்டிடங்களிலே அமைந்திருந்த நீர் நிலைகளிலும் தெய்வம் குடியிருப்பதாக நம்முன்னோர்கள் நம்பினர். அலைகடலிலே அரங்கனும் இலக்குமியும் உறைவதாக எண்ணிக் கடலையும் வழிபட்டனர். ஆற்றங்கரையிலே புதுவெள்ளம் வரும் போது மடைபோட்டு வழிபட்டனர். மழையை வாழ்த்தி வாழ்ந்தனர்.

'மார்கழி நீராடல்' நீர் வழிபாட்டில் பெற்றிருந்த சிறப்பைக் காட்டி நிற்கிறது. குளிர்ந்த காலத்தில் குளிர்ந்த நீரிலே நீராடுவது மனவுறுதிக்கும் ஒரு பயிற்சியாக அமைந்திருந்தது. துறவிகள் இத்தகைய குளிர்ந்த நீரில் நீராடி தமது மன உறுதியை வளர்த்தனர். ஜப்பானிய நாட்டிலே சுனையிலே குளிர்ந்த நீரில் நீராடுவது ஒரு வழிபாட்டு நடைமுறையாக உள்ளது.

இந்து சமயத்திலும் நீராடுதல் இத்தகையதொரு பயிற்சியாகவே இருந்தது. மாசித்திங்களில் மக நட்சத்திரநாளன்று மாசிக்கடலாட்டு நடைபெறும். எல்லாத் திக்குகளிலிருந்தும் தெய்வங்கள் கடற்கரைப்பிரதேசத்துக்கு உலாவந்து தீர்த்தப் பெருவிழா நடைபெறும். பன்னிரண்டு ஆண்டுக்கொருமுறை நடைபெறும் இப்பெருவிழா 'மாமாங்கத் தீர்த்தம்' எனச் சிறப்பாக அழைக்கப் படுகிறது. சம்பந்தர் பாடலிலே வருமாறு பதிவு செய்துள்ளார்.

“மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்
கடலாட்டுக் கண்டான் கபாலீச்சர மமர்ந்தான்”

எனவே வழிபாட்டில் நீர் இன்றியமையாத ஒன்று என்பதை எல்லோரும் உணர வேண்டும். ஐம்பூதங்களில் ஒன்றாக நீர் மனிதனுக்கு என்றும் தேவையென்பதை மறக்கலாகாது.

---

11ம் பக்கத் தொடர்ச்சி

# மீளா அடிமை உமக்கே ஆளாய்....

அன்பினால் பிற உயிர்களை ஆண்டுகொண்டே அவர்க்கு அடிமையாய் சேவகம்செய்பவன் உண்மையில் இறைவனுக்கே அடிமையாகிறான். தன்னலத்துக்காக பிறரை அடக்கியாளுகின்ற வீரத்தைவிட மற்றவர்கள் பணிக்கெனத் தன்னைத் தாழ்த்திக்கொண்டு, „என்கடன் பணி செய்துகிடப்பதே!“ என வாழும் அடிமையே உயர்வானவன்.
அவன் இறைவனின் அடிமை.
அவனுள் இறைவன் வாழ்வதால் ஆள்பவனும் அவனே.

மாடும் சுற்றமும் மற்றுள போகமும்
மங்கையர் தம்மோடும்
கூடி அங்குள குணங்களால் ஏறுண்டு
குலாவியே திரிவேனை
வீடு தந்தென்றன் வெந்தொழில் வீட்டிட
மென்மலர்க் கழல்காட்டி
ஆடுவித்தென தகம் புகுந்தாண்டதோர்
அற்புதம் அறியேனே!

(மாணிக்கவாசகர்)




## கங்கா, ஜமுனா, சரஸ்வதி நதிகளில் இன்று

# காணாமல் போன சரஸ்வதி நதியைத் தேடி...

**ரஞ்யன் F.சேவியர்**

வெண்தாமரைப் பூவில் வீற்றிருந்து அளப்பரிய அறிவையும் ஞானத்தையும் அருள் பாலிக்கும் தெய்வமான சரஸ்வதி அன்னை ஒரு போதும் காணாமல் போக மாட்டாள் என்பது உலகெங்கும் பரந்து வாழும் இந்துக்களுக்கு நன்கு தெரியும்.

அப்படியாயின் யாம் தேடும் சரஸ்வதி யார்? ரிக் வேதத்திலும் மற்றும் புராண இதிகாசங்களில் காலம் காலமாகக் குறிப்பிட்டு வந்த சரஸ்வதி நதியினைத்தான் தேடுகிறோம். நதியாயின் அது எங்கே உற்பத்தியானது? எங்கே தவழ்ந்தது? எங்கே கடலுடன் சங்கமித்தது? இப்போது எங்கே மறைந்து விட்டது? எப்படி யாரால் மறைக்கப்பட்டது? அதனைத் தேடிக் கண்டு பிடிப்பதில் என்ன நன்மைகள் எனப் பல கேள்விகள் எழலாம்.
பல இலட்சம் வருடங்களாக இமயமலையின் பனிச்சிகரங்களில் பிறந்து ஆயிரக்கணக்கான மைல்கள் துாரம் பயணித்துத் தான் செல்லுமிடமெல்லாம் மக்களைப் மகிழ்வித்து உலகின் உன்னதமான சிந்துவெளி நாகரிகத்தின் தோற்றுவாயாகவும் அதனைத் தாங்கிப் பிடித்த அன்னையாகவும் இருந்த புனித சரஸ்வதி நதி இருந்த இடம் தெரியாமல் தொலைந்துவிட்டது. தொலைந்து சுமார் 4000 வருடங்கள் ஓடி விட்டன.

காலப்போக்கில் இது ஒரு கற்பனை நதி எனப் பெரும்பாலோரால் கருதப்பட்டு வந்தது. 12 வருடங்களுக்கு ஒரு தடவை வட இந்தியாவில் உள்ள அலகபாத்தில் கங்கையும் யமுனையும் சந்திக்கும் திரிவேணி சங்கமத்தில் நீராடுவதால் கோடிக்கணக்கான பக்தர்கள் தங்கள் பாவங்களைக் கழுவிக் கொள்வார்கள். இந்நிகழ்ச்சி கும்பமேளா எனப்படும். ஆனால் 2 நதிகள் சந்திப்பு எங்ஙனம் திரிவேணி சங்கமமாகும் என்ற கேள்வி எழுகின்றது. திரிவேணி என்றால் 3 ஆறுகள். ஆக 3வது நதி எங்கே என்றொரு கேள்வியும் பின்தொடரும். அதற்குப் பதிலாக அது ஒரு புனித நதி ஆகாயத்திலிருந்து அருவமாக விழும் அற்புதநதி என ஒரு சாராரும் இல்லை 3வது நதி ஒரு நிலக்கீழ் ஆறு. அதுதான் திரிவேணி சங்கமத்தில் 3வதாகச் சங்கமிக்கிறது என மறு சாராரும் கூறி வந்தனர்.
அருவம் உருவம் என்பதெல்லாம் மக்களின் நம்பிக்கை சார்ந்தது. நம்பிக்கைகளை நிரூபிக்க முடியாது. ஆனால் உலகில் பல இடங்களில் நிலக்கீழ் நதிகள் பாய்வதாகச் செய்மதி ஆதாரங்களுடன் செய்திகள் கிடைத்தவண்ணமுள்ளன. இவ்விடத்தில் இலங்கையில் 1968ஆம் ஆண்டளவில் காங்கேசன்துறையில் கண்டுபிடிக்கப்பட்ட சுரங்கம் பற்றிக் குறிப்பிடவேண்டும். அருகிலிருந்த சீமெந்துத் தொழிற்சாலைக்கு முருகைக்கற்கள் எடுக்க அகழ்ந்தபோது நிலக்கீழ் சுரங்கமொன்று வெளியுலகுக்குத் தெரியவந்நது. அச்சுரங்கம் மிக நீளமாக இருந்ததுடன் ஆழமற்ற நன்னீராறு ஒன்று கீழே கடலை நோக்கி ஓடிக்கொண்டிருந்தது. அப்பொழுது அச்சுரங்கம் நல்லூர் இராசதானியிலிருந்து கீரிமலைக்கேணிவரை செல்வதாக ஒரு உறுதிப்படுத்தப்படாத செய்தி யொன்று பரவியிருந்தது. ஆயினும் பின்னர் இலங்கை அரசு அந்தச் சுரங்கத்தை அவசரமாக மூடிவிட்டது.

## சரஸ்வதி நதி....




1893ஆம் வருடம் ஒரு பிரித்தானியப் பொறியாளர் C.F.Oldham என்பவர் இந்தியாவின் இராஜஸ்தானில் உள்ள Gagger என்ற கோடை காலத்தில் வறண்டு போய்விடும் ஒரு நதியில் குதிரைச்சவாரி செய்து கொண்டிருக்கும் போது அவரது மனதில் ஒரு கேள்வி எழுந்தது.

மிகவும் நீர்வரத்துக் குறைந்த வருடத்தின் பெரும்பகுதியில் வறண்டு கிடக்கும் இந்த நதியின் நதிப்படுக்கையும் அதன் கரையும் 2 மைலுக்கும் மேலான அகலமாக அமைந்திருப்பதன் பின்னணி என்ன என்பதே அவரது வினா. வேதநூல்கள் புராணங்கள் இதிகாசம் மற்றும் இலக்கியங்களை உள்ளவர்களின் துணையுடன் அலசி ஆராய்ந்தபொழுது ஒரு மாபெரும்நதி ஒன்றின் சிறுபகுதி குற்றுயிராய் இருப்பதாய் கண்டுகொண்டார்.

அவதானித்தவை உண்மையிலேயே ஒரு மகாநதியின் ஒரு பகுதியாக இருக்கலாம் என நம்பினார். அதற்காகத் தொல்லியல் சான்றுகளைத் தேடியபொழுது சரஸ்வதி என்ற நதி உண்மையிலேயே இருந்து மறைந்த ஒரு ஜீவ ஊற்று என்பதற்கான சான்றுகள் கிடைக்கத் தொடங்கின. இதுவே சரஸ்வதி நதியைத் தேடும் முயற்சிக்கு அத்திவாரமிட்டது. ஆயினும் அந்த ஆய்வுகள் ஏதோ காரணத்தால் முற்றுப்பெறவில்லை.

Oldham, தான் ஆய்வு செய்யும் நதிப்படுக்கை ஒரு மாபெரும் முன்னேற்றகரமான நாகரிகத்தின் முக்கிய தோற்றுவாயாகத் திகழ்ந்தது என்பதனை அறிந்திருக்கவில்லை. சற்றுப் பின்னராக மொஹஞ்சதாரோ ஹரப்பா (சிந்துவெளி) நாகரிகத்தின் அழிந்துபோன தடயங்கள் இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் (தற்போதைய பாகிஸ்தானின் மேற்குப்பகுதி) கண்டு

**ஆதி வேதநூலான ரிக்வேதத்தில் சரஸ்வதி நதி 60 தடவைகளுக்கு மேல் சொல்லப்படுகிறது.**

பிடிக்கப் பட்டது. சிந்துவெளிச் சமுதாயம் மிகவும் முன்னேறிய மக்கள் குழாம் எனவும் இதுவரை அறியப்பட்ட பழைய நாகரிகங்களில் உன்னதமானது எனவும் எடுத்துக் கூறிய மேலைநாட்டு ஆய்வாளர்கள் அந்நாகரிகத்தின் சொந்தக்காரர்கள் திராவிடர் எனவும் ஆதாரப்படுத்தினர்.

அதேவேளை அண்மைக்கால ஆராய்ச்சிகளின்படி சிந்துவெளி நாகரிகத்தை ஒத்த அதே கால கட்டத்தில் செழிப்புற்றிருந்த மக்கள் சமுதாயங்கள் இருந்ததற்கான தொல்லியல் அடையாளங்கள் சுமார் 2500 க்கும் மேற்பட்டவை, பரவலாக இந்தியாவின் பஞ்சாப் ஹரியானா மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களிலும் பாகிஸ்தானின் மேற்குப் பகுதிகளிலும் கிடைத்துள்ளன.
இதன்மூலம் சிந்துசமவெளி நாகரிகத்தின் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் சரஸ்வதிநதியின் பங்கு மகத்தானதாயிருந்தது நிரூபணமாகிறது.
கடந்த 25 வருடங்களில்தான் சரஸ்வதியின் தேடல் முனைப்படையத் தொடங்கியது. சரித்திர சமய அரசியல் மற்றும் பொருளாதார காரணங்களுக்காகவும் சரஸ்வதியின் தேடல் அவசியமாகிறது. தற்பொழுது பல சாதகமான ஆதாரங்கள் வெளிவந்த வண்ணமுள்ளன. முதலில் சரஸ்வதி நதி என்பது ஒரு கற்பனையல்ல என்ற நிறுவத்தோடு அதன் தற்போதைய இருப்பைக் கண்டு பிடிக்க வேண்டியதாகவும் உள்ளது.
சரஸ்வதி என்ற ஒரு பழங்கால நதி இந்தியாவில் இருந்தது என்பதனை நிறுவ வேதநூல்களின் துணை அவசியப்பட்டது. ஆதி வேதநூலான ரிக்வேதத்தில் சரஸ்வதி நதி 60 தடவைகளுக்கு மேல் சொல்லப்படுகிறது.

அதேவேளை புனித கங்கை நதி பற்றி 2 தடவைகள் மட்டுமே வருகிறது. காலத்தால் ரிக்வேதத்தைவிட மிகப்பிந்திய உபநிடதங்களில் சரஸ்வதிநதி பற்றிய ஒரு குறிப்பும் இல்லாதிருப்பதும் கங்கையுடன் வேறு பல நதிகளின் பெயர்கள் மட்டுமே எழுதப்பட்டு இருப்பதிலிருந்தும் சரஸ்வதி காணாமற் போய் சுமார் 4000 வருடங்கள் உருண்டோடி விட்டதாக ஆய்வாளர்கள் கணித்திருந்தார்கள். அண்மையில் இக்கணிப்பு மிகச் சரியான தெனகார்பன் கால நிர்ணயமுறைக் கணிப்பும் ஊர்ஜிதம் செய்துள்ளது.

தொடர்ச்சி 27ம் பக்கம்

## கடவுளையே காதலியாகக் காண்பதுதான்

# இறையன்பின் உச்சநிலை.

முனைவர் பால. சிவகடாட்சம்-கனடா



பெண்ணிற் பெருந்தக்க யாவுள! "அப்பன்நீ அம்மைநீ ஐயனும்நீ" என்று இறைவனைப் போற்றிப் பாடுவார் அப்பர் சுவாமிகள். இந்த உலகில் நாம் வாழ்வாங்கு வாழ்வதற்கு வழிகாட்டி நிற்பவர்கள் தாயும் தந்தையும் ஆசிரியருமே என்பதை இவர்களை முதலாவதாக நினைவு கூருவதன் மூலம் அப்பர் எமக்கு உணர்த்தி நிற்கின்றார்.

ஒவ்வொரு மனிதனினதும் வாழ்க்கையில் இம்மூவருக்கும் பெரும்பங்கு உண்டு. இவர்களின் முறையான வழிநடத்தல் இன்றி எவரும் வாழ்க்கையில் இலகுவில் முன்னேறி விடமுடியாது.

இம்மூவரையும் இறைவனிடத்தில் காணமுடியும் என்கிறார்அப்பர். எனினும் அவர் முற்றும் துறந்த ஒரு துறவி. அவரை நல்வழிப்படுத்துவதற்கு கூட அவருக்கும் ஒரு தமக்கை தேவைப்பட்டதை நாம் மறந்துவிடக்கூடாது.

இறைவனின் அருளுடன் குழந்தையை வளர்த்து ஆளாக்கும் பொறுப்பு தாய் தந்தை ஆசிரியர் ஆகிய மூவரையும் சார்ந்துள்ளது. "ஆளாக்குதல்" என்றால் சான்றோனாக்குதல் என்று பொருள். சான்றோன் என்னும் சொல்லுக்கு இக்காலத்தில் வழங்குகிற அறிஞன் என்னும் பொருள் மட்டும் அல்லாமல், வீரன் என்னும் பொருளும் உண்டு.

இம் மூவருள் ஒருவரது பொறுப்பைவிட மற்றவரது பொறுப்பே கூடுதலானது என்று எவரும் கூறித் தமது பொறுப்பை இலேசாகத் தட்டிக் கழித்து விடமுடியாது. இந்தப் பிரச்சனையைப் பல குடும்பங்களில் இன்று காணக் கூடியதாக உள்ளது. அதேசமயம் ஒரு அப்பனாக ஒரு ஐயனாக அம்மையால் இருக்கமுடியும். ஆனால் ஒரு அம்மையின் இடத்தை அப்பனாலோ ஐயனாலோ நிரப்பிவிட முடியாது என்பதும் ஏற்றுக்கொள்ளப்படவேண்டிய ஒரு உண்மை.
பிள்ளையைப் பெற்றுக் கொடுப்பதுடன் ஒருதாயின் கடமை முடிந்துவிட்டதாக இன்று மட்டுமல்ல அன்றும் கூட எவரும் நினைத்ததில்லை.

"ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறு வாள்அருஞ்சமம் முருக்கி
களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"

பொன்முடியார் என்னும் பெண்புலவர் பாடிய இந்தப் பாடலைப் புறநானூற்றில் காணமுடியும்."ஈன்று புறம் தருதல் என் தலைக் கடனே" என்பதற்குப் "பிள்ளயைப் பெற்றுத் தருவதுதான் எனது கடமை" என்று இப் பெண் புலவர் கூறுவதாகக் கொள்ளமுடியாது. ஒரு தாயுடைய பொறுப்பு மிகப் பெரியது.

"புறந்தருதல்" என்பதை "வெளி உலகத்துக்குத் தருதல்" என்று பொருள் கொள்ள வேண்டும். குழந்தை பள்ளிக்கூடம் செல்லும் வயது வரும் வரை வெளி உலகை எதிர்கொள்வதற்குத் தேவையான அனைத்தையும் சொல்லிக் கொடுத்துப் பள்ளிக்கு அனுப்பும் பெரும் பொறுப்பு தாய்க்கு உள்ளது.

தொடர்ச்சி 16ம் பக்கம்

**கடவுளையே காதலியாகக் காண்பதுதான் இறையன்பின் உச்சநிலை.**

15ம் பக்கத் தொடர்ச்சி



ஏன் எனில் இந்தப் பருவத்தில் தாயுடன்தான் குழந்தை அதிக நேரத்தைச் செலவிடும் வாய்ப்பு உள்ளது. பிள்ளைகளைச் சான்றோராகச் சமுதாயநலம் பேணுபவராக வளர்த்து எடுத்துக் கொடுப்பது மிகமிகக் கடினமான செயலாகும். அந்தக் கடினமான செயலைச் சங்ககாலத் தாய்மார் தத்தம் பண்புகளுக்கு ஏற்ப மிக நன்றாகவே செய்திருக்கிறார்கள் என்பதை சங்கப்பாடல்கள் காட்டுகின்றன. சங்ககாலத் தாய்மார் அப்படி வளர்த்திராவிட்டால் சங்கப்பாடல்களையும், சங்க இலக்கியங்களையும், ஆய்ந்து அமர்ந்து அடங்கிய சங்கச் சான்றோர்களயும் நாம் கண்டிருக்க முடியது.

கண்ணில் சிறந்த உறுப்பில்லை கொண்டானில்
துன்னிய கேளிர் பிறரில்லை மைந்தரில்
ஒண்மைய வாய்ச் சான்ற பொருளில்லை ஈன்றாளோடு
எண்ணக் கடவுளும் இல்

கண்ணிலும் பார்க்கச் சிறந்த உடலுறுப்பு கிடையாது. கட்டிய புருஷனிலும் சிறந்த உறவினர் இருக்கமுடியாது. நல்லொழுக்கமுடைய பிள்ளைகளிலும் சிறந்த சொத்து என்று எதுவும் கிடையாது. அதேபோல் பெற்றவளிலும் மேலானதாக எண்ணக்கூடிய கடவுளும் இல்லை என்றார்கள் எம் முன்னோர்கள்.

பெற்றவளைக் கடவுளுக்கு நிகராகக் கூறியதோடு நின்று விடாமல் கடவுளையே பெண்மையாகக் கண்டு வழிபட்டவர்களும் எம்முன்னோர்கள்தான்.

ஆணாதிக்க சிந்தனையாளர்களால் மூளைச்சலவை செய்யப்பட்டவர்களிடம் இப்படியான எண்ணப் பாங்கு உருவாக முடியவில்லை. எமது முன்னோர் ஆய்ந்து அமர்ந்து அடங்கிய கொள்கைச் சான்றோர் ஆவர். அவர்கள் பெண்மையின் பெருமையை அறிந்தவர்கள். முற்றும் துறந்த முனிவனாக மாற முயற்சித்தவர்களால் கூட பெண்ணை மறந்திருக்க முடியவில்லை. எனவேதான் கடவுளைப் பெண்வடிவில் கண்டு போற்றுவதன் மூலம் பற்றற்ற துறவு நிலையை, பக்தியின் உச்சநிலையை அடைய முயன்றார்கள்.

கால்காட்டிக் கைகாட்டி கண்கள் முகம் காட்டி
மால்காட்டும் மங்கையரை மறந்திருப்பது எக்காலம்

என்று ஏங்கிய சித்தர்கள் மாதா மனோன்மணியிடமே அடைக்கலம் ஆனார்கள்.
மாமன் மகளடியோ மச்சினியோ நானறியேன்
காமன் கணையெனக்குக் கனலாக வேகுதடி
மாமன் மகளாகி மச்சினியும் நீயானால்
காமன் கணைகளெல்லாம் என் கண்ணம்மா!
கண்விழிக்க வேகாவோ!

“கண்ணம்மா நீயே என் காதலியாகிவிடு“ என்று அந்தக்கடவுளிடமே கெஞ்சுகின்றார் இந்தச் சித்தர். கடவுளையே காதலியாகக் காண்பதுதான் இறையன்பின் உச்சநிலை. இந்த உச்சநிலையை அடைந்தவர்களைத்தான் சித்தர் என்கிறோம்.

# அசைவத்தை விட சைவ உணவு ஏன் உடலுக்கு நல்லது எனத் தெரியுமா?

கேமலதா



சைவ உணவு, அசைவ உணவைக் காட்டிலும் நல்லது என ஆராய்ச்சி ஒன்று நடந்தது. அதன் விவரங்கள் இங்கே கொடுக் கப்பட்டுள்ளன. சைவ உணவுத் திட்டத்தைப பின்பற்றினால் அதில் ஏழு அற்புத நன்மை கள் உள்ளன என்று சமீபத்திய ஆய்வு முடிவுகள் சொல்கின்றன.

இங்கிலாந்து மருத்துவப் பத்திரிகை 39 வயது முதல் 60 வயது வரை உள்ள 6000 சைவ உணவுக்காரர்களையும், 5000 அசைவ உணவுக்காரர்களையும் 12 ஆண்டு கள் தொடர்ந்து ஆராய்ந்தது சைவ உணவுக்காரர்கள், 40க்கும் குறைவாகவே புற்றுநோயால் இறக்கும் அபாயம் இருந்தது.

மற்ற வியாதிகளால் இறக்கும் அபாயம் 20 தான் இருந்தது. அசைவ உணவுக்காரர்கள் உடலில் இறப்பு அபாயம் அதிகம் இருந்தது. கொலாஸ்டிரல், புற்றுநோய் அறிகுறிகள் பரவலாகக் காணப்பட்டன.

அசைவ உணவுக் காரர்களைவிட சைவ உணவுக் காரர்களின் உடலில் வளர்ச்சி மாற்றம் பதி னோரு சதவிகிதம் மெதுவாக நடைபெறு கிறது. குறைந்த அளவு கலோரி உணவு என்பதால் செல்களும் அழியாமல் இருக்கின்றன.எனவே,காலையில் நம்பிக்கை யுடன் எழும் உத்தரவாதம் உண்டு. அசைவ உணவு திடீர் வேலை நிறுத்தம் செய்து உடல் நலக்குறைவை ஏற்படுத்தும்.

**நோய் விலகும் :**

சிலசமயங்களில் பால் அருந்தும்போது கூட விஷ மருந்துகள் நம் உடலுக்குள் போய்விடுகின்றன. ஆனால் பழம், காய்கறி களில் இப்படி இல்லை. காய்ச்சல் வருவது போல் இருந்தால் சாதாரணப் புடலங்காயைச் சாப்பிட்டால் போதும். இதில் எல்லாவகை யான தாது உப்புக்களும் இருப்பதால் உடனடியாகக் காய்ச்சல் குறைகிறது.

ஆக, சைவ உணவு என்பது மருந்தைப் போல் செயல்படுகிறது.

**ஞாபக சக்தி :**

துரித உணவகங்களில் விற்கப்படும் அசைவ உணவுவகைகளைச் சாப்பிட்டுவிட்டு வந்தவர் களிடம் ஒரு பரிசோதனை நடத்தப்பட்டது. அவர் களின் ஞாபகசக்தி, புலன் உணர்வு, எச்சரிக்கை உணர்வு முதலியன மிகவும் சராசரியாக இருந்தன. சுற்றுப்புற ஆரோக்கியம் என்ற இதழில் இந்த உண்மை வெளியானது. ஆனால் பழங்கள், காய்கறிகளிலும் இந்த உப்பு ஓரளவு கிடைப்பதால் எப்போதும் விழிப் புணர்வுடன் செயல்படுவார்கள்.

**மந்தத் தன்மை :**

கொழுப்பு அதிகம் கொண்ட விலங்குகளைச் சாப்பிடும் ஆண்களுக்கு ஆண்மைக்குறைவு ஏற்படுகிறது. மந்தப் புத்தியும் இயலாமையும் சேர்ந்து கொள்கின்றன. இரத்தக் குழாய்களில் தடை ஏற்படுகிறது.

**இதயத்திற்கு நண்பன் :**

எப்போதும் எச்சரிக்கை உணர்வுடன் ஆர்வமாக வாழக் கீரைகளில் உள்ள இரும்புச் சத்தும், வைட்டமின் 'சி"யும் உதவுகின்றன. இதனால் எல்லா உறுப்புகளுக்கும் இரத்தமும், ஆக்ஸி ஜனும் நன்கு செயல்படுகிறது. ஆண்மைக்குறைவு, இருதய அடைப்பு முதலியன ஏற்பட வாய்ப் பில்லை. இந்த நன்மைகள் பழங்கள், காய்கறிகளில்தான் தாராளமாகக்க கிடைக் கின்றன.

**உடல் பருமன் :**

உடல் வேகமாக குண்டாவதற்கு அசைவ உணவு காரணமாகிறது. ஆனால், சைவ உணவில் உள்ள கொண்டைக்கடலை, சோளம் போன்ற தானியம் மற்றும் பருப்பு வகைகள்கூட இரத்தக் கொதிப்பு, உடல் பருமன் ஆகாமல் பார்த்துக் கொள்கின்றன. இவற்றில் உள்ள பொட்டாசியம், மக்னீசியம் ஆகி யவை இரத்தக்கொதிப்பு ஏற்படாமல் பார்த்துக் கொள்கின்றன. தேங்காய், சோளம் முதலிய வற்றில் உள்ள துத்தநாக உப்பு உடலைக் கொழுக்கவிடாமல் இராணுவக் கட்டுப்பாட்டுன் பாதுகாக்கிறது.

# பெரிய புராணம்

(சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி)




பெரிய புராணம் சைவசமய இலக்கியங்களின் மணிமுடியாக விளங்கும் ஒரு நூலாகும். இந்நூல் திருத்தொண்டர் புராணம் எனவும் அழைக்கப்படுகின்றது. இந்நூல் சுந்தரமூர்த்தி சுவாமிகளால் அருளிச் செய்யப்பட்ட திருத் தொண்டர் தொகையை முதல் நூலாகவும், நம்பியாண்டார் நம்பிகள் பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியை துணைநூலாகவும் கொண்டு அறுபத்துமூன்று நாயன்மாரின் சரித்திரத்தை கூறும் நூலாகும்.

இந்நூல் பன்னிரெண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த இரண்டாம் குலோத்துங்க சோழ அரசனின் (அனபாய சோழன்) வேண்டுகோளுக் கமைய அரசனின் அமைச்சராக இருந்த அருள்மொழித்தேவர் என்னும் இயற்பெயர் உடைய சேக்கிழார் சுவாமிகளால் பாடப் பட்டது.

இந்த நூலை தொடங்கு வதற்கு இறைவனே சேக்கிழார்சுவாமிகளுக்கு "உலகெலாம்" என அடி எடுத்துக் கொடுத்தார். இந்நூல் உல கெலாம் எனத் தொடங்கி உலகெலாம் என நிறைவு பெறுவதும் இந்நூலின் சிறப்பாகும்.

இந்நூல் பன்னிரண்டாம் திருமுறையாக வகுக் கப்பட்டுள்ளது. இந்நூலில் வரும் நாயன் மார்களின் வரலாறுகள் ஆண், பெண் வேறு பாடின்றி, இனம், தொழில் என்பவற்றைக் கடந்து எழுதப்பட்ட ஒரு தேசிய நூலாகும்.

பெரியபுராணம் மனிதவாழ்க்கையை உணர் வதற்கு ஒரு உன்னத நூலாகும். சிவசிந் தனைக்கும் செந்தமிழ் திறத்திற்கும் இந்நூல் ஈடிணையற்றது. இதற்குச் சான்றாக எம்மி டையே வாழ்ந்த பகவான் ரமணர் அவரின் பதி னேழாம் வயதில் ஞானியாவதற்கு முன்பு அவர் படித்த ஒரே ஒரு சமய நூல் பெரிய புராணம் என அவரே கூறியுள்ளார்.

இந்நூலை சைவசமய நூலாகப்பார்க்காமல் மனிதகுலத்திற்கு பொதுவாக எல்லாச் சமயத் தவர்களும் பயன்பெறும் நூலா கப்பார்ப்பதற்கு இந்நூலில் வரும் பின்வரும் ஒரு பாடல் சான் றாகும்.

"இங்கு இதன் நாமம்கூறின் இவ்வுலகத்து முன்னாள்தங்கிருள் இரண்டில் மாக்கள் சிந்தை யுள் சார்ந்துந்து நின்றபொங்கிய இருளை ஏனைப் புறஇருள் போக்குகின்ற செங்கதிரவன் போல் நீக்கும் திருத்தொண்டர் புராணம் என்பாம்"

அதாவது புற இருளைச் சூரியன் போக்குவது போல் உலகின் மனிதராக உள்ள அனை வரினதும் அக இருளை போக்குவது திருத் தொண்டர் புராணம் என இப்பாடல் கூறுகின்றது. இந்நூலில் வரும் கடைசிப் பாடல்

"என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்றுகாதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்றுளார் அடியாரவர் வான்புகழ்
நின்றதெங்கும் நிலவி உலகெலாம்"

அதாவது ஆன்மா இறைவனை அன்பு செய்து இன்பம் பெற்று உயர்வடையும்படி இறை அடியார்களின் புகழ் உலகெங்கும் விளங்கு கின்றது என இப்பாடல் கூறுகின்றது. முக்கிய மாக எளியநிலையில் மனம் தளராமல் இறை சிந்தனையோடு தொண்டு புரிந்தால் இறையருள் பெறலாம் என்பதை இந்நூல் நாயன்மார்களின் வரலாறுகள் மூலம் எமக்கு உணர்த்துகின்றது. இந்நூலில் வரும் சில நாயன்மார்களின் வரலாறுகள் எமக்கு உணர்த் துபவற்றை திருமந்திரத்தில் திருமூலநாயனார் கூறிய வற்றுடன் ஒப்பிட்டுப் பார்ப்போமானால்

1. இளையான் குடிமாறநாயனார் - மகேசுர பூசை.

"படமாடக் கோயில் பகவற்கு ஒன்றுஈயில்
நடமாடக்கோயில் நம்பர்க்கு அங்கு ஆகா
நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்றுஈயில்
படமாடக் கோயில் பகவற்கு அதுஆமே."

தொடர்ச்சி 14ம் பக்கம்

படம் போன்ற அமைப்பை உடைய கோபுரங் களையுடைய கோயிலின் உள்ளே இருக்கும் இறைவனுக்குப் படைத்தால் அது இறைவனுக் குத்தான் சேரும் அடியார் களுக் குச் சேராது. ஆனால் நடமாடும் கோயிலாக விளங்கும் சீவன்களுக்குத் தருகின்ற ஒன்று சீவன் உள்ளே சிவன் இருக்கும் காரணத் தால் அது சிவனுக்கும் போய்ச் சேரும்.

**இளையான் குடிமாறநாயனார்** (சிவ அடியார் களுக்கு அமுதூட்டி) வரலாற்றின் மூலம் சீலமார் பூசை என சேக்கிழார் சுவாமிகளால் சிறப்பிக்கப்பட்ட மகேசுர பூசை சிவலோகம் சென்று இன்புற்றிருப்பதற்கான வழி என உணர்த்தப்பட்டுள்ளது.

**பூசலார் நாயனார்** - உள்ளம் பெரும் கோயில்உள்ளத்துள்ளே உள்ளது பரம் பொருள் எனக் கூறும் பாடல் எண் 2550

"காயக் குழப்பனைக் காய நன்னாடனைக்
காயத்தின் உள்ளே கமழ்கின்ற நந்தியைத்
தேயத்துஉள்ளே எங்கும் தேடித் திரிபவர்
காயத்துள் நின்ற கருத்து அறியாரே."

**சீவர்கள் உடம்போடு பொருந்தி அவர்கள்** உயிரில் நுண்ணுயிராய்க் கலந்து இருப்ப வனை, ஆருயிர்களின் உடம்பையே தான் அருளாட்சி செய்யும் திருநாடாகக் கொண்டு திகழ்பவனை, உடம்புக்குள்ளே ஒளிவடி வாய்த் திகழ்பவனை, பாவம் இந்தப் பேதை மக்கள் எங்கெங்கோ தேடித் திரிகிறார்களே! இவர்கள் அப்பெருமான் இவர்கள் உடம் புக்குள்ளேயே இருக்கின்ற உண்மை அறியாதவர்கள்.

**பூசலார் நாயனார்**
வரலாற்றின் மூலம் (மனத்தி லேயே இறைவனுக்குக் கோயில் கட்டியவர்) இறைவன் எம்முடன் எமது உள்ளத்தில் இருக்கின்றான் என நம்பிக்கை யுடன் செயல்ப்பட்டால் இறை வன் எம் முடனேயே இருந்து எம்மை வழிநடத்துவான் என உணர்த்தப்பட்டுள்ளது.

**அமர்நீதி நாயனார்** அறம் செய்
"தன்னை அறியாது தான்நல்லன் என்னாது
இங்(கு)இன்மை அறியா(து) இளையார்என்று
ஓராதுவன்மையில் வந்திடுங் கூற்றம் வரு
முன்னம் தன்மையும் நல்ல தவஞ்செய்யும் நீரே"
உயிரை எடுக்க வரும் எமன் எம்மை எப்படிப் பட்டவர் என எண்ணிப் பார்க்க மாட்டான். எம்மை பாவம், நல்லவன், ஏழை, சிறுபிள்ளை என விட்டு விடவும்மாட்டான். எமன் வலிமை யுடையவன். எனவே அவன் உயிரைக் கவர்ந்து செல்வதற்கு முன்பாக நல்லதான தானம், தவம் என்பனவற்றைச் செய்யுங்கள் மனிதர்களே.

அமர்நீதி நாயனார் (உணவு, உடை கொடுத்து) வரலாற்றின் மூலம் அறம் செய்வதன் மூலம் சிவலோக வாழ்வையும் பெறலாம் என எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

**கண்ணப்பநாயனார்** அன்பே சிவம்

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ(து) ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவ(து) ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே."

அன்பு வேறு, இறைவன் வேறு இரண்டும் ஒன்றல்ல தனித்தனியானவை என்று சொல் பவர்கள் அறிவில்லாத மூடர்கள். அன்பே இறைவன் என்பதைப் பலரும் அறியாது இருக்கிறார்கள். அன்புதான் இறை வன் என்பதை எல்லாரும் அறிந்துவிட்டால் பிறகு அவர்களே அன்புருவான இறைவனாய் ஆனந்த வெள்ளத்தில் அமர்ந்திருப்பார்கள் (வாழ்ந்தி ருப்பார்கள்).

**கண்ணப்ப நாயனார்** (காளத்தி நாதர் மேல் அன்பு வைத்து) வரலாற்றின் மூலம் இறைவன் மேல் மெய்யன்பு தலைப் படுமாயின் முத்தி கிடைக்கும் என்பதை எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

**திருநாவுக்கரசு நாயனார்** சரியை வழிபாடு

"நேர்ந்திடு மூல சரியை நெறி இதென்று
ஆய்ந்திடும் காலங்கி கஞ்ச மலையமான்
ஓர்ந்திடும் கந்துரு கேண்மின்கள் பூதலத்து
ஓர்ந்திடும் சுத்த சைவத்து உயிரதே"

முத்தியாகிய பேரின்ப நிலை அடைவ தற்கான மூல காரணமாகவும், முதன்மை யான வழியா கவும் இருக்கின்ற சரியை நெறி இன்னதென்று ஆய்ந்தறிகின்ற, நுணுகி உணர்ந்திடும் சந்துரு ஆகிய என் அன்புச் சீடர்களே! கேட்டுக் கொள்ளுங்கள். பூவுலகில் உண்மை உணர்ந் திடும் சுத்த சைவருக்கு உயிர் போன்றதே இந்தச் சரியை நெறிதான்.

**தொடர்ச்சி 21ம் பக்கம்.**

வெயில் காலத்தில் ஏன் ஆண்கள் கட்டாயம் விபூதி, சந்தனம் நெற்றியில் பூச வேண்டும்? வெயில் காலத்தில் ஆண்கள் விபூதி, சந்தனம் நெற்றியில் பூசுவதால் உடலுக்கு பல நன்மைகள் ஏற்படுகின்றன.
முக்கியமாக நெற்றிப்பொட்டில் அதிகரிக்கும் சூடு உடலின் நாடி, நரம்புகளில் தாக்கத்தை அதிகரிக்க கூடியவை. இதனால், தலைவலி, உடல் சூடு, தூக்கமின்மை போன்றவை வெயில் காலத்தில் அதிகரிக்க கூடும்.

பொதுவாக, வெயில் காலத்தில் உடல் சூடு தாறுமாறாக அதிகரிக்கும். இதில் இருந்து தப்பிக்க நீங்கள் அதிகம் நீர் குடிக்கலாம், குளிர்பானம் பருகலாம். பழங்கள் நிறைய உண்ணலாம்.
ஆனால், நெற்றிப்பொட்டில் அதிகரிக்கும் சூட்டை எப்படி தணிப்பது?
விபூதி! தலையில் வியர்வை மற்றும் தண்ணீர் அதிகம் சேரும் போது அதன் சிருபக்தி கெட்டிப்பட்டு தலையில் தங்கிவிடும். இதனால், தலைவலி, தூக்கமின்மை போன்றவை ஏற்படும் வாய்ப்புகள் வெகுவாக இருக்கின்றன.
பலன்! விபூதியை நெற்றிப் பொட்டில் பூசுவதால் அது நீரை உறிஞ்சி வெளியேற்ற உதவும். இதன் பயனால் வெயில் காலத்தில் அதிகம் தலைவலி அல்லது தலையில் நீர் தங்காமல் ஆரோக்கியத்தை பாதுகாக்க முடியும்.
சந்தனம்! உடலின் பெரும்பாலான நாடி, நரம்புகள் மூளையுடன் இணைக்கப் பட்டுள்ளன. அவை யாவும் நெற்றிப் பொட்டின் வழியாக தான் செல்கின்றன. இதனால் நெற்றிப் பொட்டு சூடாகும் வாய்ப்புகள் இருக்கின்றன.
ஆகவே, நெற்றிப் பொட்டை சூடாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியம்.



## மஞ்சள், குங்குமம் விபூதி, சந்தனம்.

அடிவயிறு! பொதுவாக நமது வயிறு பகுதியில் நெருப்பு சக்தி இருக்கிறது. இந்த சூட்டின் தாக்கம் நமது நெற்றிப் பொட்டில் தான் உணர முடியும். அதனால் தான் காய்ச்சல் அறியவும், அதிக காய்ச்சலின் போது தலையில் நெற்றியில் குளிர்ந்த நீரில் நனைத்த துணியை நெற்றியில் பரப்பி சூட்டை தனிக்கிறோம்.

மஞ்சள், குங்குமம்! விபூதி, சந்தனம், ஆகிய அனைத்தும் சிறந்த கிருமி நாசினியாகும். ஆகையால் தான் இவற்றை நமது நெற்றிப் பொட்டில் பூசுவதால் நோய்த்தொற்று அண்டாமல் இருக்கவும், உடல் சூட்டை குறைத்து குளுமையாக உணரவும் பயன்படுத்த கூறுகின்றனர். இரசாயன கலப்பு கூடாது! ஆனால் இன்று உண்மையான விபூதி, சந்தனம், மஞ்சள், குங்குமத்தை கண்டறிந்து வாங்குவதே மிகவும் சிரமம். இவற்றில் எல்லாம் கலர் போடி மற்றும் இரசாயன கலப்பு சேர்ந்து தான் விற்று வருகின்றனர். மேலும், பெண்கள் குங்குமத்தில் இருந்து ஸ்டிக்கர் பொட்டுக்கு மாறி பலகாலமாகிவிட்டது.




T.T.S.Brothers GmbH&Co.KG

உங்கள் வீட்டு தேவைக்கான அனைத்து மளிகை பொருட்கள்
ஆடை அணிகலன்கள் மற்றும்
உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்புவது முதல் அனைத்து
தேவைகளுக்கும்
நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288

Helmholtz Str.11
46045 Oberhausen
Tel:0208 202829

Garten Str.29
48147 Münster
Tel: 0251 2301184

Johannes Str.35
53225 Bonn Beuel
Tel. 0228 40377846

சிவத்தமிழ் சிறக்க வாழ்த்துகிறோம்

# கற்பனைகளின் கூட்டம்தான் வாழ்க்கை



மனம் என்றால் என்ன என்று உற்று பார்க்கும் போது, மனம் என்பது உடம்புக்குள் இருக்கின்ற உணர்வுகளின் கூட்டமைப்பு. உடம்பில்லாத இடத்தில் மனம் இல்லை. மனம் உடம்போடு தொடர்புடையது. உடம்பு எதோடு தொடர்புடையது என்று ஆராய்ந்தார்கள் ஞானிகள். அது பஞ்ச பூதங்களால் ஆனது. இந்த பஞ்ச பூதங்கள்தான் உடம்பின் இயக்கத்துக்கு காரணம். உடம்பில் ரத்தம், தசை, பிராணனன், கணச்சூடு, வெற்றிடம் இவை அனைத்தும் பஞ்சபூதங்களாக போற்ற படுகின்றன. இந்த ஐந்தும் வேலை செய்வதால்தான் மனம் என்ற ஒன்று உருவாகிறது.

புத்தி தன் அணுக்களில் அனைத்தையும் ஞாபகத்தில் வைத்து கொள்ளகிறது. மனம் அந்த ஞாபகத்தை தன் திறனுக்கு ஏற்ப கற்பனை செய்கிறது. ”மனதின் ஆட்டம்தான் வாழ்க்கை, அதாவது கற்பனைகளின் கூட்டம்தான் வாழ்க்கை” என்பது ஞானிகளின் கருத்து.

நான் அழகாக இருக்கிறேன் என்பவை அனைத்தும் கற்பனையே.. இந்த மனதின் மாயையில்தான் வாழ்க்கை ஓடுகிறது என்பது அறிந்தோர் வாக்கு. தான் அழகாக இருக்கிறோம், இந்த பெண் தனக்கு வேண்டும். எந்த பெண் அழகு எல்லாரும் ரத்தமும், சதையும் கலந்த மலமூத்திரதாரிகள்தானே? எந்த வாழ்க்கை நிரந்தரம்? எல்லாம் அழியகூடிய ஒன்று தான். எது சந்தோஷம்? எல்லாம் காணாமல் போக வேண்டியது தான். அனைத்தும் மனதின் கற்பனையே.. இருந்தாலும் மனம் எதையோ தேடி அலைந்து கொண்டுதான் இருக்கிறது.

தான் நினைத்து நடந்து விட்டால் அதை சந்தோஷம் என்று கற்பனை செய்கிறது, நடக்கவில்லை யென்றால் துக்கம் என்று கற்பனை செய்கிறது. தான் நினைத்து நடந்து விட்டால், அடுத்து ஒன்றை தேட தொடங்கிவிடுகிறது. இடைவிடாது அலைகிறது. மனம் திருப்தியாவதே இல்லை. இதுவே மனதின் இயல்பாக கருதப்டுகிறது. எது மனதின் இயல்போ அதுவே மனிதனின் இயல்பு. மனிதனின் இயல்பு இடைவிடாது சுகத்தை தேடி அலைவது. இதில், மனிதன் இந்த சுகத்தை அடைவதற்கு தன் வாழ்க்கை முழுதும் எப்படியெல்லாம் அவஸ்தை படவேண்டுமோ, எப்படியெல்லாம் அவமானபடவேண்டுமோ அது அனைத்தையும் பட்டுகொண்டே இருக்கிறான்.

இப்படி ஆட்டிப்படைகும் மனதை தன் வசப்படுத்ததான் நமது முன்னோர்கள் பல வழிமுறைகளை கண்டறிந்தார்கள். அதில் ஒன்றுதான் பிராணனை உற்று நோக்குவது, பிராணனை கட்டுப் படுத்துதல். இதற்கென்று ஒரு நியமத்தை ஏற்ப்படுத்தி அதை “பிராணாயாமம்“ என்று அழைத்தார்கள். மனதை வசப்படுத்த இதுவும் ஒரு வழி, இது போல் பல வழிகள் உள்ளன.

பதினென் சித்தர்களில் ஒருவராக கருதப்படும் “அகத்திய மாமுனி“-யின் பாடல் ஒன்று:

”மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டா
மனமது செம்மையானால் வாயுவைவுயர்த்த வேண்டா
மனமது செம்மையானால் வாசியை நிறுத்த வேண்டா
மனமது செம்மையானால் மந்திரம் செம்மையாமே...”

மனிதன் என்றும் மனதிற்க்கு அடிமையே...

---

## பெரிய புராணம் 19 ம் பக்கத் தொடர்ச்சி

### திருநாவுக்கரசு நாயனார்

(உளவாரத் தொண்டு) வரலாற்றின் மூலம் இறைவனை அடைவதற்கு இலகுவாகச் செய்யக்கூடிய சரியை வழிபாட்டின் மகிமை விளக்கப் பட்டுள்ளது.

### திருநீலகண்ட நாயனார்

பிறர் மனை நாடாமை

“ஆத்த மனையாள் அகத்தில் இருக்கவே
காத்த மனையாளைக் காமுறும் காளையர்
காச்ச பலாவின் கனி உண்ண மாட்டாமல்
ஈச்சம் பழத்திற்கு இடர்உற்ற வாரே”


அன்புடைய மனைவி வீட்டில் இருக்க மற்றொரு வருக்கு உரிமையான பிறன் மனைவியை விரும்பும் இளைஞர் செயல் வீட்டில் காய்த்துத் தொங்கும் பலாப்பழத்தைத் தின்ன முடியாமல் எங்கோ பழுத்துக் கிடக்கின்ற ஈச்சம் பழத்திற்கு ஆசைப்பட்டு அவதிப்படுவது போலாகும்.

திருநீலகண்ட நாயனார் வரலாற்றின் மூலம் நல்ஒழுக்கத்துடன் இருந்தாலே சிவலோகப் பதவி கிடைக்கும் என எடுத்துக்காட்டப் பட்டுள்ளது.

# யேர்மனி சுவெற்றா கனகதுர்க்கா அம்பாள் ஆலயத்தில் இத்தாலியக் கலைஞரின் கதகளி







படங்கள்
ஆன்மீகத் தென்றல்
த.புவனேந்திரன்

இத்தாலி நாட்டைச்சேர்ந்த திருவாளர் **Mario Barzaghi** இந்தியா கேரளாவில் கதகளி நாட்டியத்தில் பயிற்ச்சி பெற்று விஷ்ணுவின் பத்து அவதாரங்களில் ஒன்றான பரசுராம அவதாரத்தை சுவெற்றா கனகதுர்க்கா அம்பாள் ஆலயத்தில் கதகளி நடனத்தில் ஆடி அடியார்களின் நெஞ்சில் அசையாத இடத்தைப்பிடித்துக்கொண்டர்.65 வயதுடைய இக்கலைஞர் தான் கற்ற கதக்களி நடனத்தால் இன்றும் மிடுக்குடன் காணப்படுகின்றார். கதக்களி நடனத்தை கடந்த 34 வருடங்களாக ஆடிவருகின்றார். முக்கியமாக ஒரு நிமிட இடைவெளி மட்டுமே எடுத்துக் கொண்டு ஒரு மணி நேரம் ஆடியது அதிசயமானது.

## தேவாலயங்களுக்கு என்ன சலுகைகள் உரிமைகள் இருக்கிறதோ!







## அவை இந்து ஆலயமான கம் காமாட்சி அம்பாள் ஆலயத்திற்கும் வழங்கப்படும்!

ஹம் காமாட்சி அம்பாள் ஆலயம் ஆரம்பித்து 28 ஆண்டுகள் பூர்த்தியாகின்றது. ஆலயத்தில் உற்சவங்கள் தொடர்ந்து 25 ஆண்டுகள் நடைபெற்றுவருகின்றது. ஜேர்மனியில் இருக்கும் கத்தோலிக்க தேவாலயங்களுக்கு என்ன சலுகைகள் உரிமைகள் இருக்கிறதோ அவற்றை இந்து ஆலயமான கம் காமாட்சி அம்பாள் ஆலயத்திற்கும் வழங்கவேண்டும் என்று சென்ற 13 ஆண்டுகளாக ஜேர்மனிய அரசாங்கத்தில் முன்ஸ்ரர் நீதிமன்றத்தில் கம் காமாட்சி அம்பாள் அலயத்தால் வழக்குத் தொடரப்பட்டு வந்து சென்ற இரண்டு ஆண்டுகளாக பல தடங்கல்கள் இடையூறுகள் ஏற்பட்ட போதிலும் 2017 பெப்ரவரி மாதம். வழக்கு வெற்றியுடன் பூர்த்தியாகியது.

இது சம்பந்தமாக ஐரோப்பிய மாநில மந்திரியும் கம் நகரபிதாவும் எஸ்.பி.டி காலாச்சார மந்திரியும் கம் காமாட்சிஅம்பாள் ஆலயத்திற்கு வருகைதந்து ஆலயத்தைப் பார்வையிட்டு தாங்கள் இந்து ஆலயத்திற்கு வழங்கிய நீதிமன்ற தீர்ப்பு சரியானதே என்று மகிழ்தனர். ஆலயத்திற்கு தாங்கள் வருகை தந்தது தங்கழுக்கு மகிழ்சி என்றும் ஆலயத்தில் செலவிட்ட 3 மணி நேரமும் ஆனந்தம் அடைந்த்தாகவும் கூறிச் சென்றனர்.

தகவலும்: ஆன்மீகத்தென்றல். த.புவனேந்திரன்



# கந்தல் பொதிக்கிழவன்

ரஞ்சனி .பா

அரண்மனையை ஒட்டி வசித்த பிச்சைக்காரன் ஒருவன், அந்த அரண்மனைக் கதவில் ஒட்டப் பட்டிருந்த அறிவிப்பைக் கண்டான்.

அதில், மன்னர் விருந்தளிக்கப் போவதா கவும், அரச உடை அணிந்து வருவோர் மட்டுமே அனுமதிக்கப்படுவர் என்றும் குறிப் பிடப்பட் டிருந்தது. பிச்சைக்காரன், தான் அணிந்திருந்த கந்தல் உடைகளை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்துக் கொண்டான்.

நிச்சயமாக அரசரும், அவருடைய குடும்பத் தினரும் மட்டுமே ராஜ உடை உடுத்தியிருக்க முடியும் என எண்ணினான்.

திடீரென அவனுக்குள் ஓர் எண்ணம்... அந்த மாதிரி எண்ணுகிற அளவுக்குத் தனக்குள் ஏற்பட்ட துணிச்சலைப் பற்றி யோசித்த போதே, அவனுக்குள் நடுக்கம் ஏற்பட்டது.

இருந்தாலும், தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, அரண்மனை வாசலை அடைந் தான். வாயிற்காவலனிடம், “ராஜாவைப் பார்க்க வேண்டும்” என்றான். அந்தக் காவலன், அர சரிடம் அனுமதி வாங்கி வந்தான்.

உள்ளே வந்த பிச்சைக்காரனிடம், “என்னைப் பார்க்க வேண்டும் என்றாயாமே?” என்றார் அரசர்.

“ஆமாம்! நீங்கள் அளிக்கும் விருந்தில் கலந்து கொள்ள எனக்கும் ஆசை. ஆனால், என்னிடம் ராஜ உடைகள் இல்லை. என்னை அதிகப் பிரசங்கி என நினைக்காவிட்டால், உங்களது பழைய ஆடையை அளித்து உதவினால், அதனை அணிந்துகொண்டு விருந்துக்கு வருவேன்” என்றான் மிகவும் பவ்யமாக.

அதே நேரம், மன்னர் என்ன சொல்வாரோ என நடுங்கியபடி, அவரையே பார்த்துக் கொண டிருந்தான். ஆனால் மன்னர், அவனுக்கு ராஜ உடை ஒன்றை வழங்கினார். அந்த உடையை உடுத்திக் கொண்டவன், கண்ணாடி முன் நின்று கவனித்தான் தோற்றத்தில் கம்பீரம் மிளிர் வதைக் கண்டு வியந்தான்!

பிச்சைக் காரனுக்கு ஏற்பட்ட சலனம்

அப்போது மன்னர் அவனிடம், “விருந்தில் கலந்துகொள்வதற்குத் தகுதி உடையவனாகி விட்டாய். அதைவிட, முக்கியமான ஒன்று... இனி உனக்கு வேறெந்த உடையும் தேவைப் படாது. உன் ஆயுள் முழுவதும் இந்த உடை அப்படியே இருக்கும். துவைக்கவோ தூய்மைப் படுத்தவோ அவசியம் இருக்காது” என்றார்.

கண்ணீர்மல்க, மன்னருக்கு நன்றி கூறி விட்டுக் கிளம்ப யத்தனித்தவன், மூலையில் கிடந்த தனது பழைய ஆடைகளைக் கவனித்தான். அவனது மனம் சற்றே சலனப்பட்டது.

'ஒருவேளை, அரசர் கூறியது தவறாக இருந்து, இந்த உடைகள் கிழிந்து விட்டால்... அப்போது நமக்குப் பழைய உடைகள் தேவைப்படுமே?!' என யோசித்தவன், சட்டெனச் சென்று தன் பழைய உடைகளை வாரிக்கொண்டான்.

வீடு, வாசல் இல்லாத அவனால் பழைய துணிகளை எங்கேயும் வைக்க முடியவில்லை எங்கே போனாலும் பழைய ஆடைகளையும் சுமந்தே திரிந்தான். மன்னர் அளித்த இரவு விருந்தையும் அவனால் மகிழ்ச்சியாக ஏற்க முடியவில்லை.

அடிக்கடி கீழே விழுந்து விடும் பழைய துணிகளைச் சேகரிக்கும் மும்முரத்தில், பரிமாறப்பட்ட பதார்த்தங்களைச் சரிவரருசிக்க முடியவில்லை. அரசர் சொன்னது உண்மை என்பது நாளடைவில் அவனுக்குப் புரிந்தது.

அவர் கொடுத்த ஆடை அழுக்காகவோ, கிழியவோ இல்லை. ஆனாலும், அந்த யாச கனுக்குப் பழைய உடைகள் மீது நாளுக்கு நாள் பிடிப்பு அதிகமானது. மக்களும் அவனது ராஜ உடையைக் கவனிக்காமல், அந்த கந்தல் மூட்டையையே பார்த்தனர்.

அவனைக் 'கந்தல் பொதி கிழவன்' என்றே அழைத்தனர். இறக்கும் தருணத்தில் இருந்த அவனைப் பார்க்க, அரசர் வந்தார். அவனது தலைமாட்டில் இருந்த கந்தல் மூட்டையைப் பார்த்து, அரசரின் முகம் சோகமாவதைக் கண்டான்.

பழைய துணி மூட்டை, அவனது வாழ்நாளின் மொத்த மகிழ்ச்சியையுமே பறித்து விட்டது.

அந்த யாசகனிடம் மட்டுமல்ல, நம் எல் லோரிடமும் அப்படியொரு மூட்டை இருக்கிறது. அதனுள் விரோதம், கோபம், கவலை, சோகம், பகைமை... எனப் பல பெயர்களில் வேண்டாத பொருட்கள் இருக்கின்றன.அவற்றைப் பாதுகாப் பதிலேயே கவனம் செலுத்துவதால், நமது வாழ்வில் வீசுகின்ற மகிழ்ச்சித் தென்றலை நுகர முடியாமல் இருக்கிறோம்.

# இறைவன் ஒளிந்து இருக்கும் இடம்



கமகம என்று மணம் பரப்பும் ஊதுபத்தி: கணகண என்று ஒலி எழுப்பும் மணி ஓசை: மளமள வென்று ஒப்புவிக்கும் மந்தி ரங்கள்..... இதுதான் வழிபாடு என்பது பலரது கருத்து. இது சரியா?
கோயிலுக்குள் கடவுள் இருக்கிறாரா? என்று நாத்திகர் கேள்வி எழுப்பும் போது, கோயிலுக் குள் மட்டும்தான் கடவுள் இருக்கிறார் என்ற கருத்தில் நடந்து கொள்ளும் சில ஆத்திகர் களின் செயல் முறைகள் சரிதானா?

வழிபாடு என்பது வாழ்க்கையில் ஒரு நிகழ்ச் சியா? இல்லை வாழ்க்கை முழு வதுமே ஒரு வழிபாடா? எது சரி?

ஆண்டவன் கோவிலுக்குள் இருக்கிறார் என்றால் இல்லாத இடம் ஒன்று இருக் கிறதா? அப்படி ஆண்டவன் இல்லாத இடம் இருந்தால் அதைக் காட்டுங்களேன்..... பார்க்க எனக்கு ஆசையாக இருக்கிறது.

பெற்றோரால் கைவிடப்பட்ட குழந்தை களுக்கு நிதிதிரட்டும் பணி ஒரு முறை எனக்கு வாய்த்தது.
கோவையில் கோயில்களுக்கு வாரி வழங்கும் சீட்டு நிறுவனம் ஒன்றின் அதிபரிடம் உதவி கோரினேன். அவர் சொன்ன பதில் என்னை அதிரவைத்தது.

சாமிக்கு எவ்வளவு கேட்டாலும் தருகிறேன் ஆனால் அநாதைப்பயல்களுக்கு கேட்கா தீங்கள் தரமுடியாது என்றார்.
இவர் கடவுளையும் புரிந்து கொள்ள வில்லை. மனிதர்களையும் புரிந்து கொள் வில்லை.

சாமிக்கும், கோவிலுக்கும் எவ்வளவு வேண்டுமானாலும் தாறேன் என்றால் கடவுளைப்பற்றி இவர் என்ன நினைக்கிறார்.

இவரிடம் கை ஏந்திப் பிழைக்க வேண்டிய அளவு, கீழ்த்தரமான நிலையில் பிச்சை எடுக்கும் நிலையில் இறைவன் இருக் கின்றானா?
இவரால் காப்பற்றப் பட வேண்டும் என்கிற அளவுக்கு இறைவன் பல வீனமாகி விட்டானா? கோவிலுக்கு தருகிறேன் என்கி றான். அப்படியானால் கோவிலைத் தாண்டி கடவுள் வேறு எங்கும் இருக்க மாட்டாரா? யோசியுங்கள்.

இவர் வார்த்தை உண்மை என்றால் மனிதனை “நடமாடும் கோயில்” என்றும் ஆலயங்களை “படமாகும் கோயில்” என்றும் அறிவித்த திருமந்திரத்தை என்ன செய்வது.

மனிதர்கள் எல்லாமே நடமாடும் கோயில் என்பது நம்மவர்க்குப் புரியவே புரியாதா?
ஒவ்வொரு மனிதனும் கடவுளே!

எனவே மனிதனுக்குச் செய்வதைக்கடவுள் தனக்குச் செய்வதாகக் கருதுகின்றான்.
காரணம். மனித எல்லைக்குள் சிக்கிய இறை வனுக்குத்தான் பிறரது உதவி தேவைப் படுகின்றது.

பரம்பொருளாகிய எல்லையைக் கடந்த நிலையில் அதற்கு எந்தத் தேவையும் இல்லை. அதனால்தான் மக்கள் பணி மகேசன் பணியானது. ஏழையின் சிரிப்பில் இறைவன் தெரியத் தொடங்கினான்.
பசித்தவனுக்கும் துயர் உற்றவனுக்கும் செய்யும் பணி எப்படிக் கடவுளுக்குச் செய்வதாகும்.
ஒரு சின்ன உதாரணம் சொல்லுகிறேன்.

வீட்டில் ஏகப்பட்ட வேலைகள். அம்மா அடிப்படியில் வெந்துகொண்டு இருக்கிறாள். விருந்துக்கு யாரோ வருகிறார்கள் என்று நிறைய வேலை அம்மாவுக்கு.

நேரம் காலம் தெரியாமல் வேலை வாங்கும் அப்பா, எலும்பிச்சம்பழம் கரைக்கும்படி கேட்டுத் தொலைக்கிறார்.
அடுப்பில் சட்டியில் கிளறுவதைக் கைவிட்டு இதைச் செய்தால் சட்டி அடிப்பிடித்துக் காய்ந்து விடும். அம்மா என் செய்வாள்.?

24ம் பக்கத் தொடர்ச்சி



பளிச்சென்று அந்த வீட்டுப் பெரிய பெண் ஓடி வந்து அம்மா அப்பாவுக்கு எலும் பிச்சம்பழம் நான் கரைக்கிறேன் என்று கரைத்துக் கொடுத்தால், அந்தப் பெண் யாருக்கு உதவி செய்கிறாள்.
எலும்பிச்சம்பழம் கரைக்கச்சொன்னவர் அப்பா... அவருக்குத்தானே உதவினாள்.
அனால் அம்மா என்ன சொல்கிறாள்...?
என் கண்ணே.. அம்மாவுக்கு எவ்வளவு பெரிய உதவி பண்ணினே தெரியுமா?... நீ தங்கம்... என்று குழந்தையை முத்த மிடுகிறாள்.

தான் செய்ய வேண்டிய வேலையை தனக்குப் பதிலாக யாராவது செய்தால் நாம் மகிழ்ச்சி அடைவதில்லையா? அப்படித்தான் இறைவனும் மகிழ்கிறார்.

அவனது படைப்பில் எல்லோருக்கும் உண வளிக்கவேண்டியது அவனது பொறுப்பு. எல்லோர் துயர் துடைப்பதும் அவனது கடமை. அந்தக் கடமையை எந்த மனிதன் செய்தாலும் ஆகா எனக்கு எவ்வளவு உதவுபண்ணினாய் என்று கட்டியணைக்கும் தாயாகி, இறைவன் நம்மை இறுக்கத் தழுவு கின்றான். கடவுள் அன்பைப் பெறச் சிறந்த வழி இதுதான்.

துன்பப்படும் ஒவ்வொருவரையும் முடிந்த வரை நாம் காப்பாற்றினால் ஆஹா இவன் நம்முடைய பாரத்தைக் குறைத்து விட்டான் என்று மகிழ்வான் இல்லையா? எனவே மனிதருக்குச் செய்யும் சேவை இறை வனுக்குச் செய்யும் சேவை என்று ஏன் பலருக்குப் புரிவதில்லை.

அது சரி கடவுள் மனிதனுக்குள் எங்கே இருக்கிறார். உயிருக்கு உயிராக உள்ளத் துக்குள் ஒளிந்துகொண்டு இருக்கின்றாராம்.
அவனை உள்ளத்ததுள்ளே ஒளிக்கும் ஒருவன், உள்ளத்தைவிட்டு ஓரடி நீங்கா ஒருவன் என்று அறிவிக்கின்றார் திருமூலர்.
உள்ளத்துள்ளே ஏன் ஒளிந்துகொண்டான்..? அதுதான் நல்ல பாதுகாப்பான இடமாக இருக்குமோ?
ஒளித்து பிடித்து கண்ணாம் பூச்சி விளையாடும் போது யாரும் கண்டுபிடிக்க முடியாத இடத்தில் தானே ஒளியவிரும்பு வோம். நாம் கண்டுபிடிக்க முடியாதபடி

கடவுள் நமது உள்ளத்தில் ஒளிந்தானாம். அவனிடம் அது இருக்கிறது இவனிடம் இது இருக்கிறது என்று பிறரிடம் என்ன என்ன இருக்கிறது என்று குடைந்து குடைந்து பார்க்கும் நாம். நம்முள் தேடுவது இல்லையே!
ஊரெல்லாம் கடவுளைத்தேடும் நாம் நமக்குள் தேடமாட்டோம் என்றுதான் கடவுள் நமக்குள் ஒளிந்துகொண்டார்.

ஏ படத்திற்கு ஒரு இலவசச் சீட்டு வந்தது. மகனுக்குத் தெரியாமல் ஒளித்துவைக்க அப்பா படாத பாடுபட்டார்.
எங்கே வைத்தாலும் மகன் கண்டுபிடிப்பானே என்று அப்பா புலம்பினார்.
அவனுக்கு தெரியாமல் நான் ஒளிச்சுவைக் கிறேன் என்று அம்மா வாங்கிக் கொண்டாள்.

எங்கு ஒளித்து வைத்தாள் என்று தெரியாது.

படத்துக்குப் புறப்படும் சமயம் வெளியில் எடுத்தாள்.
மகனுக்குத் தெரியாமல் எங்கு வைத்தாய் என்று அப்பா கேட்டார்.
அவன் புத்தகத்துள்தான் வைத்திருந்தேன்.
அதைத்தான் அவன் பார்ப் பதில்லையே என்றாள் அம்மா.
நன்றி: சுகி.சிவம். மனசே நீ ஒரு மந்திரச்சாவி.


ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாள் ஆலயம்



தினசரி மாலை
6.00 மணிக்குப்
பூஜை உண்டு
Tel: 02304/ 16721
Robert koch Str.5
58239 Schwerte
Germany

துர்க்கா பூஜா துரந்தரர்
சிவசாமிக்குருக்கள்
ஜெயந்திநாதக்குருக்கள்

Tel: 02304- 910 9445
0177 20 16 941



# கட்டைவிரலுக்கும் சுட்டுவிரலுக்கும் இடையில்

**ரிதன்**

இன்னல்கள் மத்தியிலும் இனிய முகம் படைத்தவர் அவர்.

எதிரிகளை தன் அன்பால் கனிய வைத்தவர்.
கோபமே வாழ்வில் அவருக்கு வராது என்று சொல்ல முடியாது,
**வரும் ...**

துன்பப்படுபவர்கள் துயர்களை துடைக்க மறந்த சமூகசேவையாளர்கள் மீது.

கவிதையும் கட்டுரையும் உள்ளதை உள்ளம் காட்டாமல், வெறும் கட்டை விரலுக்கும் சுட்டு விரலுக்கும் இடையில் பிறக்குமென்றால் ..
அந்தப் படைப்பின் சொந்தக்காரர் மீது.

தனித்து நின்று தன்னால் முடிந்ததை முடித்தவர்.

கூட்டிக் கழித்துப்பார்த்தால் கூட்டம் போட்டு திட்டம் தீட்டியவர்களது சேவைக் கணக்கில், இவர் தனித்தே ஆட்சியமைக்கும் முழுக் கணக்கைப் பெற்றவர்.
"எனக்கும் அந்த சேவையாளருக்கும் விரோதம்" என ஊர் கதைத்தாலும் நானும், அவரும் ஊர் உறங்கும் வேளை, ஒரு தடவையாவது தொலை பேசியில் உரையாட மறந்ததில்லை.
அப்படி ஒரு நட்பு எங்களது.
இத்தனையையும் நான் ஒருபோதும் வெளிப் படையாகக் கூறியது கிடையாது.
**ஆனால், இப்போது......**

இங்கு மேடைபோட்டுக் கூறுகின்றேன்.
காரணம்....
இன்று அவர் நம்மிடம் இல்லை.
மறைந்து விட்டார்.

இது ஒருவரது இரங்கல் செய்தி!
ஒரு எதிரியின் மறைவு குறித்து வரைந்த மடல் இது. இதனையே உயிரோடு இருக்கும் போது கூறியிருந்தால், மக்களுக்காக உழைத்த அந்த உத்தமருக்கு ஒத்தணமாக அது இருந் திருக்கும்.
இன்னும் நல்லது செய்ய அவருக்கு ஊன்று கோலாய் அமைந்திருக்கும்.

இறந்த பின் ஒருவரிடம் காணும் நல்ல பண்பை பயமின்றி வாழும்போதே வாழ்த்த ஒருவனால் முடியும் என்றால்!
வாழ்த்துபவரும், வாழ்த்தப்படுபவரும், உலகம் வாழ உந்து சக்தியாகத் திகழ்வார்கள்.

**எனவே, வாழும்போதே வாழ்த்தப் பழகு வோம்!**





**S.K.Silks & Gold Paraadise**

**என்றும் புதியது**
**அழகின் இரகசியம் அது**

பட்டுச் சேலைகளுக்கும் தங்க நகைகளுக்கும் நாடுங்கள்...

Mr.P.Sritharan
Proprietor

**Tel:0231 9501 647**

**Adler str 33 - 44137 Dortmund**

சிவத்தமிழ் சிறக்க வாழ்த்துகிறோம்

15 ம் பக்கத் தொடர்ச்சி **சரஸ்வதி நதி....**



இந்திய மற்றும் அமெரிக்கச் செய்மதிகளின் தரவுகளும் அதிநவீன நிலக்கீழ் உணர்கருவிகளால் அறியப்பட்ட ஆதாரங்களும் தொல்லியல் சான்றுகளும் சரஸ்வதி இமயத்தின் பனிமுகடுகளில் இருந்து உருவாகி 5 மைல்கள் அகலமான நதியாகத் தெற்குப் புறமாகப் பலநூறு மைல்கள் சென்று பின்னர் இந்தியாவின் மேற்கு வடமேற்குத் திசைகளில் பல உபநதிகளை உருவாக்கி வேறு பல உதிரி நதிகளை உள்வாங்கி அரபிக்கடலில் பல கிளைகளாகச் சங்கமித்ததாகப் பெரும்பான்மையான ஆய்வாளர்கள் நம்புகின்றனர்.

மேலும் ராஜஸ்தான் பாலைவனமாக மாறுவதற்கு முன்பு அது பச்சைப் பசேலெனச் செழிப்பாக இருந்ததாகவும் சரஸ்வதியின் மறைவே சிந்துவெளி நாகரிகத்தின் அழிவுக்கும் ராஜஸ்தான் போன்ற பகுதிகள் பாலைவனமாக மாறியதற்கான காரணிகளில் பிரதானமானது எனவும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.


அதேவேளை சரஸ்வதிக்கு வற்றாத நீராதாரம் அளித்து வந்த இமயத்தின அருகே சுமார் நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட மிகப்பெரும் பூமியதிர்ச்சி நதிக்கான நீர்வரத்தைத் துண்டித்துவிட்டதாகவும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட காலநிலை மாற்றங்கள் சரஸ்வதியை முற்றாக அழித்து மறைத்து விட்டதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இந்துவேத நூல்களிலும் இலக்கியங்களிலும் மக்களின் நம்பிக்கையாய் இருந்து எவ்வித சுவடுமின்றி காய்ந்து மறைந்த சரஸ்வதி நதியை மீட்டெடுத்து மீண்டும் வழித்தடங்களை உருவாக்கினால் இந்திய மற்றும் பாகிஸ்தானில் உள்ள குடிநீர்ப்பஞ்சத்தை நீக்குவதுடன் நீர்ப்பாசனம் போக்குவரத்து என்பனவற்றுடன் வெள்ளப்பெருக்கு அனர்த்தங்களையும் தவிர்த்துப் பாலைவனங்களை மீண்டும் சோலைவனங்களாக மாற்ற முடியும்.

சரஸ்வதிநதியை இப்பொழுது தேடும் பணியில் முன்னிலை வகிக்கும் ஆய்வு நிலையமாக இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்தில் இயங்கும் சரஸ்வதி சிந்து ஆய்வுமையம் விளங்குகின்றது. னுச. கல்யாணராமன் என்னும் ஆய்வாளர் தலைமையில் 200 பக்கங்களுக்கு மேற்பட்ட கிடைத்தற்கரிய தடயங்களையும் சரஸ்வதி பற்றிய தரவுகளையும் ஆவணப்படுத்தியுள்ள சரஸ்வதி சிந்து ஆய்வுமையத்தின் ஆய்வுப் பெறுபேறுகளின் பயனாக இந்திய நடுவண் மற்றும் பல வடஇந்திய மாநில அரசுகள் தாங்களும் சரஸ்வதியைத் தேடும் முயற்சியில் இறங்கியுள்ளன. முக்கியமாக இந்துக்களால் புனிதமெனக் கொண்டாடப்படும் இந்நதியைத் தேட பாகிஸ்தான் அரசு அகழ்வாராய்ச்சியில் இந்தியாவிற்கு வழங்கும் ஒத்துழைப்பு வியந்து பாராட்டப்பட வேண்டிய அம்சமாக உள்ளது.

நிலவின் தட்ப வெப்பத்தையும் செவ்வாய்க் கிரகத்தில் புளுட்டோவில் உள்ள நில அமைப்புகளையும் துல்லியமாகக் கண்டுபிடிக்கும் தற்கால விஞ்ஞானிகள் தம்வசமுள்ள நவீன தொழில்நுட்ப வசதிகளின் துணையுடன் தம் காலடியில் மறைந்து கிடக்கும் பல இலட்சம் ஆண்டுகள் பலநூறு மைல்கள் வளைந்தும் நெளிந்தும் தவழ்ந்தும் பாய்ந்தோடிய அளப்பரிய வளங்களை அள்ளித்தந்த சரஸ்வதி நதியை முழுமையாகக் கண்டடையும் நாள் வெகுதொலைவில் இல்லை என்பது உண்மை. As the Saraswati River became erratic … and started drying. **நன்றி :தமிழர்தகவல்–கனடா 25 வருட நிறைவு – ஆண்டு மலர்**





# ஒழுங்கை விழுங்கும் மனிதர்கள்

கௌசி

அரோஹரா..... என்னும் ஒலி

நகரில் பள்ளி கொண்டுள்ள கடவுள் காதுகளில் அலைஅலையாய்ச் சென்றடைய, செவிப் பறையை அதிரச் செய்த ஓசை கேட்டு கல்லாய் அமர்ந்திருந்த விக்கிரகம் கண்கள், மெதுவாகத் திறக்கப்படுகின்றது. சனக்கூட்டத்தின் இடிபாடுகள் தென்படுகின்றது. கோயில் மணிச்சத்தத்திலும் கூட்டத்தின் சத்தம் அபாரம். வாய்களினால் வந்த வார்த்தைகள் மனங்களில் உறையவில்லையே. அகல விரித்த கண்கள், அடுத்தவர் ஆடை அலங்காரங்களில் மொய்க்கின்றனவே. மனம் எங்கோ, வார்த்தைகள் எங்கோ செல்கின்றனவே. திறந்த கண்கள் திரும்பவும் மூடின. மந்திரங்கள் மணியோசைகள் அத்தனையும் மெல்ல மெல்லஅடங்கின.

அடியார்கள் அனைவரும் அன்னதான மண்டபத்தை மொய்த்தனர். பல நாட்கள் பட்டினி கிடந்து ஒருநாள் உணவு கண்ட பரபரப்பு. அடிபட்டு இடிபட்டு பந்திக்கு முந்துகின்றனர். ""இந்த ஐரோப்பிய மண்ணில் அந்நியர் அவலம்"" என ஒரு ஜேர்மனியர் பத்திரிகைக் குறிப்பெடுத்து தலைப்பு இடுகின்றார். சற்றே விலகி அகன்ற கோயில் வீதியில் மெல்லென வந்த தென்றல் காற்றின் ஸ்பரிசத்தை உணர்ந்தபடி ஆகாயத்தை அண்ணாந்து நோக்குகின்றேன்.

வரிசைவரிசையாய் அழகாகச் சிறகு விரித்துப் பறக்கின்றன புள்ளினங்கள். அவற்றின் ஒழுங்கின் நேர்த்தியை வியந்து பார்க்கின்றேன். கோடு போட்டு விட்டது போல் கோணாமல் செல்கின்ற அழகை இரசித்தபடித் தரையை நோக்கிக் கண்களை இறக்குகின்றேன். வரிசைவரிசையாய் எறும்பு அணி ஒன்றின் அணிவகுப்புத் தென்படுகின்றது. அதைச் சற்றே சீண்டிப் பார்க்க ஆசை கொண்டு இடையே ஒரு குச்சியைப் போடுகின்றேன்.

எந்தவித சஞ்சலமுமின்றி மிக இலாவகமாகத் தடையை விலக்கி, ஒழுங்காக நிமிர்ந்து, நேர் பாதை கொண்டு, நிதானமாக முன்னேறும் பாங்கைக் கண்ணுற்றேன். என் மனக்கண்ணை குளக்கரை நோக்கித் திருப்புகின்றேன். தாய் வாத்து மிதந்துவரக் குஞ்சுகள் அதைத் தொடர்ந்து ஒழுங்கு மாறாது ஒய்யாரமாய்ப் பவனி வரும் இரம்யத்தை நினைத்துச் சிரித்த வண்ணம் அன்னதானக் கூட்டத்தைப் பார்க்கிறேன். அன்று காளமேகம் கண்ட சத்திரம் என் மனதில் பொறி தட்டுகிறது. ஒரு சத்திரத்திலே ஒரு பிராமணி இலைக்கும் வாய்க்கும் இடையிலே ஒரு உணவுப் போராட்டமே நடத்துகின்றார். உண்ணும் வேகத்தில் அவர் தலைமுடி அவிழ்ந்து உணவில் விழ, அதை உதறிவிடுகின்றார். அந்த உதறலில் பறந்து வந்த சோற்றுப் பருக்கை காளமேகம் உணவில் விழுகின்றது. அருவருப்புடன் ஆத்திரம்மேலிட,

""சுருக்கவிழ்ந்த முன் குடுமிச் சோழியா சோற்றுப்
பொருக்குலர்ந்த வாயா புலையா திருக்குடந்தைக்
கோட்டானே! நாயே! குரங்கே! உனையொருத்தி
போட்டாளே வேலையற்றுப் போய்""

என்று வசை பாடுகின்றார். அக்கவி இங்கிருந்திருந்தால்,
பட்டுவேட்டி பளபளக்க பட்டுப்புடவை மினுமினுங்க
வட்டில் சோற்றுக்காய்த் தட்டுத் தடுமாறுபவரே உங்கள்
கட்டுப்பாடு நிலைகுலைகிறது கற்றுக் கொள்ளுங்கள்
கற்றுத் தருவார் ஐந்தறிவு ஓரறிவு உயிர்கள்
என்று அழகாகப் பாடியிருப்பார்.




அன்று முதல் இன்று
வரை
தமிழர் இல்லம் எங்கும்
ஒலிக்கிறது

வெற்றிமணி

Vettimaniy@hotmail.com
0163 199 2333




உலகின் முன்னணி விமான
நிறுவனங்களை


Consulting Network
Travels·Business·Worldwide

ஒன்றிணைத்து
சலுகை விலையில் உத்தரவாதமான
சேவையினை வழங்குகின்றோம்




Rheinische str-72,44137 Dortmund Germany Tel: 0231 10 87 63 60
Tel: 0231- 108 763 61, 0231 584 407 63 Fax: 0231 108 763 62 Mobile:0163- 871 43 69


சிவத்தமிழ் சிறக்க வாழ்த்துகிறோம்


யேர்மனியில் புகழ்பெற்ற
மொத்த விற்பனை நிலையம்
StaR-Impex
StaR-Impex
அபிஷேகப் பொருட்களுக்கு இன்றே நாடுங்கள்
எமது இணையத்தளத்திற்குச் சென்று
எமது விஷேட சலுகைகளை அறிந்து
பயன் பெறுங்கள்!
web.Star-impex.net
ஆலயத்திற்கும், இல்லத்தின் மங்கலகரமன வைபவங்களுக்குமான பூஜைப் பொருட்கள். மற்றும்திருவிழாக்களுக்கு வேண்டிய அபிஷேகப் பொருட்களுக்கும் என்றும் நாடுங்கள்.
Fax: 0231/8602698 E-Mail: star-impex@live.de
Kipperstr. Tor 3
44147 Dortmund
Tel.: 0231/8602696 Mobil: 0172/2183703
சிவத்தமிழ் சிறக்க வாழ்த்துகிறோம்

Bochum

# Lucky Fly Reisebüro




Allee Str.38-40a- 44793 Bochum-Germany Tel: 0234-2399032 FaX 0234-79457171
e.mail:siva 0108 @hotmail.com
**www.Lucky-fly.de**



# Lucky Fly Reisebüro

உலகை வலம் வர இனிதாய் உதவும் நிறுவனம்

## Goldene Triangle-Rajasthan

## Süd Indien Temple Triangle

## வட இந்திய, தென் இந்தியாவிற்கான

## உல்லாசப் பயணம்

உங்களை வந்து இறங்கும் விமான நிலையத்தில் இருந்து,அழைத்துச்சென்று,
புகழ்பெற்ற இடங்கள் யாவும் காட்டி மகிழ்ந்து, அதி உயர்தர விடுதிகளில்,
காலை, மாலை, உணவுகளுடன் உபசரித்து,பாதுகாப்பன,
பயனுள்ள சுற்றுலாவை வடிவமைத்து மீண்டும், உங்களை
விமான நிலையத்திற்கு அழைத்து வந்து, உங்கள் நாட்டுக்கு வழியனுப்பும் வரை
எங்கள் சேவை கண்டு மகிழ்வது நிச்சயம்!

**www.Lucky-fly.de**

e.mail:siva 0108 @hotmail.com



**Mob:No: 0179 1484 892**

**Allee Str.38-40a- 44793 Bochum-Germany Tel: 0234-2399032 FaX 0234-79457171**

**Altendorfer Str:266- 45143 Essen - Tel: 0201 8009 3749**


சிவத்தமிழ் சிறக்க வாழ்த்துகிறோம்